# குடும்பப் பழமொழிகள்

ARA PUBLIC LIBRARY
1 ...Y 1935
MADRAS

ப. ராமஸ்வாமி

REFERENCE

வள்ளுவர் பண்ணை
19, 2வது மெயின் ரோடு, சி.ஐ.டி. நகர், சென்னை-35

முதற் பதிப்பு ; அக்டோபர் ,69
உரிமை பண்ணைக்கே

விலை ரூபாய் 3-00

அச்சிட்டோர் ;
ஸௌந்தரா பிரிண்டர்ஸ் சென்னை-5.

378.94811
RAM

REFERENCE

1 1985
MADRAS

# பதிப்புரை

ஒரு நாட்டின் பழமொழிகளைத் தொகுத்தாலே அது அறிவுக் களஞ்சியமாகவும் அனுபவக் களஞ்சியமாகவும் விளங்கும். உலகிலுள்ள பல நாடுகளின் பழமொழிகளிலிருந்து குடும்பத்திற்கேற்ற சிறந்த பழமொழிகளில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து உருவாக்கப் பட்டதே இந் நூல்.

இந் நூல் ஒவ்வொரு குடும்பத்திலும், மாதர் நல மன்றங்களிலும் அவசியம் இருக்க வேண்டியது; நாள் தோறும் படித்துப் பயன் பெற வேண்டிய நூல்.

ஆசிரியருக்கும், சிறப்பாக அச்சிட்டு உதவியவர்களுக்கும் எமது நன்றி.

ந. பழநியப்பன்

சென்னை—35

வள்ளுவர் பண்ணை

1985

# உள்ளுரை


மனிதன் ... 5
வாழ்க்கை ... 7
ஆடவர் ... 12
பெண்கள் ... 13
காதல் ... 21
பெண் பார்த்தல் ... 26
திருமணம் ... 28
கணவன் ... 33
மனைவி ... 35
கற்பு ... 40
வீடு ... 40
அண்டை வீட்டுக்காரர் ... 43
இல்வாழ்க்கை ... 44
குழந்தைகள் ... 47
தாய் தந்தையர் ... 53
குலம் ... 57
இனம் ... ,,
குடும்பம் ... ,,
சகோதரர் ... 58
மாமியார் ... ,,
மருமகன் ... 59
சுற்றம் ... ,,
கைம்பெண் ... 60
அநாதைகள் ... 61
பழமை ... ,,
ஒற்றுமை ... ,,
விருந்து ... 63
இளமை ... 64
முதுமை ... 67
உடற் குறைகள் ... 70
ஆரோக்கியம் ... 71
நோய் ... 72
ஸ்வத்தியம் ... 74
மருந்து ... 78
மரணம் ... 79
கல்லறை ... 83
நன்மையும் தீமையும் ... ,,
உலக அனுபவம் ... 85
உலகத்தோடு ஒழுகல் ... 90

1 ... 1935

# மனிதன்

பல்லக்கில் இருப்பவன் மனிதன், பல்லக்குத் தூக்குபவனும் மனிதன்தான். —சீனா

உலகம் என்ற சாணையில் மனிதன் ஒரு கத்தி. —ஆர்மீனியா

உலகம் என்ற பானையில் மனிதன் ஒரு கரண்டி. —( ,, )

ஒரு மனிதன் வாழ்ந்தான் என்பதற்கு, அவன் ஒரு வீடாவது கட்டியிருக்க வேண்டும், ஒரு மகனையாவது பெற்றிருக்க வேண்டும், அல்லது ஒரு நூலாவது எழுதியிருக்கவேண்டும். —இதாலி

மனிதன் காற்றடைத்த ஒரு தோற்பை. —லத்தீன்

நீ கடலுடன் போட்டியிட்டுக்கொண்டிருக்கும் ஓர் ஆறு. —( ,, )

மனிதன் நடமாடும் பிணம். —ரஷ்யா

ஒருவன் பூரண மனிதனாக விளங்க வேண்டுமானால், அவன் பொதுப் பள்ளியில் மூன்று ஆண்டுகளும், பல்கலைக் கழகத்தில் ஓராண்டும், சிறையில் இரண்டாண்டுகளும் கழித்திருக்க வேண்டும். —( ,, )

ஒவ்வொரு மனிதனும் பொதுமக்களே. —ஸ்பெயின்

மெலிந்தவனை அரை ஆள் என்றும், பருத்தவனை இரண்டு ஆள் என்றும் கணக்கிடுவதில்லை. —ஆப்பிரிகா

மனிதன் தானே தனக்குச் சயித்தான். -இந்தியா

மலே இடம் பெயர்ந்துவிட்டது என்று நீ கேள்விப்பட்டால் நம்பலாம்; ஆனுல் ஒரு மனிதன் குணம் திருந்திவிட்டான் என்று கேட்டால், அதை நம்ப வேண்டாம். —அரேபியா

மனிதனும் விலங்குகளும் ஒன்றுபோலத்தான் இருக்கிருர்கள். ( ,, )

மேலான மனிதன் தேடுவது அவனுள்ளேயே இருக்கின்றது; சாதாரண மனிதன் தேடுவது மற்றவர்களிடம் இருக்கிறது. —கன்ஃபூஷியஸ்

மனிதனைப் போல நடந்து கொள்பவனே மனிதன். —ஹாலந்து

வெட்கம் மனிதனை விட்டு விலகி நின்ருல், அவன் விலங்காவான். —சுவின்பர்ன்

தெய்வப் படைப்பில் மனிதனே தலைசிறந்தவன். —இங்கிலாந்து

மனிதன் இயற்கையில் ஓர் அற்புதம். —இங்கிலாந்து

மனிதனுக்கு முதன்மையான பகைவன் மனிதனே. -( ,, )

சிரிக்கும் மிருகம் மனிதன் ஒருவன் தான். -( ,, )

வெட்கப்படும் விலங்கு மனிதன் ஒருவனே. -மார்க்ட்வெயின்

மனிதர்களுக்கு மனம் பளிங்கு, பெண்களுக்கு மனம் மெழுகு. -ஷேக்ஸ்பியர்

இரக்கமற்ற தன்மையைக் காட்டிலும் மனிதனுக்கு இழிவானது எதுவுமில்லை. —ஸ்பென்ஸர்

புத்தகங்களைப் படிப்பதைக் காட்டிலும், மனிதர்களைப் படிக்க வேண்டியது அவசியம். —ஃபிரான்ஸ்

மனிதன் தனக்குள் ஒரு கொடிய விலங்கை வைத்திருக்கிருன். —ஜெர்மனி

மிருகத்தையும் அதிமானிடனையும் பிணைத்துக் கட்டும் கயிறு மனிதன். —நீட்ஷே

[மனிதனே தன்னிலும் மேம்பட்ட அதிமானிடனுகப் பரிணமிக்க முடியும் என்ற கொள்கையுடையவர் நீட்ஷே என்ற தத்துவஞானி.]

மனிதனுக்கு மனிதன் கடவுள். -கிரீஸ்

பெரும்பாலான மனிதர் தீயவர். -( ,, )

மனிதன் பகுத்தறிவுள்ள விலங்கு. -லத்தீன்

மனிதன் தனக்கு எவ்வளவு வேண்டியவனே அதைவிட அதிகமாகத் தேவர்களுக்கு வேண்டியவன். -( ,, )

மனிதனுக்கு மனிதன் ஓநாயாக இருக்கிறுன். -( ,, )

மனித சமூகத்தை விட்டு மேலெழுந்து நிற்காத மனிதன் ஓர் அற்பப் பொருளாவான். -செனீகா

ஒரு மனிதனைத் தெரிந்து கொள்வதினும், பத்து நாடுகளைத் தெரிந்து கொள்ளல் எளிது. -யூதர்

## வாழ்க்கை

இளந் தளிர்களும் உதிர்ந்த சருகுகளும் எங்குமே காணப் பெறுகின்றன. -இந்தியா

சில சமயம் மூழ்குதல், சில சமயம் மேலெழுதல்: இதுதான் வாழ்க்கை. -( ,, )

வாழ்க்கை காற்றின் நடுவிலுள்ள ஒரு தீபம். -ஜப்பான்

வாழ்க்கை என்பது அன்பும் மனைவியும். -( ,, )

உணவுக்காகவும் உடைக்காகவுமே நாம் இரண்டு கால்களாலும் ஓடித் திரிகிறேம். -சீனு

உன் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் உன் சரித்திரத்தில் ஓர் ஏடாகும். -அரேபியா

சுவர்க்கத்திற்குச் செல்வோரின் பயிற்சி நிலையமே வாழ்க்கை. -( ,, )

வாழ்க்கை இரு பகுதிகளுள்ளது: ஒன்று கழிந்தகாலம் என்ற கனவு, மற்றது வருங்காலம் என்ற விருப்பம். -( ,, )

நீ காலையைக் கண்டிருக்கிறாய், இன்னும் மாலையைக் காண வில்லை. —யூதர்

வாழ்க்கை மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட கடன்தான்; மரணம் என்னும் கடன்காரன் அதைப் பெற்றுக் கொள்ள ஒருநாள் வருவான். —( ,, )

வாழ்க்கை என்பது இடைவிடாத குடிவெறி—மகிழ்ச்சி மறைந்த பின்பும், தலைவலி இருந்துகொண்டே யிருக்கும். —பாரசீகம்

மூச்சு வருவதும் போவதும் தொட்டிலின் ஆட்டம்; முடிவான தூக்கம் வருமுன் எச்சரிக்கையாயிரு. —( ,, )

வாழ்க்கை ஒரு வெங்காயம், அதை உரிக்கும்பொழுது கண்ணீர் வரும். —ஃபிரான்ஸ்

வாழ்க்கை என்னவென்று நாம் தெரிந்து கொள்ளுமுன், பாதி வாழ்க்கை கழிந்து விடுகின்றது. —( ,, )

வாழ்க்கையின் முற்பகுதி இரண்டாம் பகுதியை விரும்புவதில் கழிகின்றது; இரண்டாம் பகுதி முதற் பகுதிக்காக வருந்துவதில் கழிகின்றது. —ஃபிரான்ஸ்

நாம் வருகிறோம், அழுகிறோம், இதுதான் வாழ்க்கை; நாம் அழுகிறோம், போகிறோம், இதுதான் மரணம். —( ,, )

நேற்று, இன்று, நாளை ஆகிய மூன்று நாட்களே மனிதனின் நாட்கள். —( ,, )

மரணத்தைப் பற்றிச் சிந்திப்பவன் வாழத் தொடங்குகிறான். —ஜெர்மனி

பன்னிரண்டு வயதில் குழந்தைப் பருவத்தைப் புதைக்கிறோம்; பதினெட்டில் வாலிபப் பருவத்தையும், இருபதில் முதற் காதலையும், முப்பதில் மனிதரிடம் கொண்ட நம்பிக்கையையும், அறுபதிலிருந்து சிறிது சிறிதாக ஐம்புலன்களையும் புதைத்து விடுகிறோம். —( ,, )

ஒவ்வொரு மணியும் (நேரமும்) நம்மைக் காயப்படுத்திக் கொண்டேயிருக்கின்றது, கடைசி மணி அடித்தவுடன் ஆவி பிரிகின்றது. —( ,, )

வாழ்க்கை நமக்கே அளிக்கபெற்றதன்று, இரவலாக வந்தது. —ஜெர்மனி

இறந்து போனவனின் ‘உயில்’ அவன் வாழ்க்கையின் கண்ணுடி. -போலந்து

[‘உயில்’ என்பது மரண சாசனம்.]

இருபது வருடம் வளர்ச்சி, இருபது வருடம் மலர்ச்சி, இருபது வருடம் ஒரே நிலை, இருபது வருடம் வாடுதல். -பெல்ஜியம்

நாம் அழுதுகொண்டே பிறக்கிறேம், குறை சொல்லிக் கொண்டே வாழ்கிறேம், ஏமாற்ற மடைந்து இறக் கிறேம். —இங்கிலாந்து

நான் பிறக்கும்பொழுதே அழுதேன்; ஏன் அழுதேன் என் பதை ஒவ்வொரு நாளும் உணர்கிறேன். —( ,, )

வாழ்வும் துயரமும் ஒன்ருகத் தோன்றியவை. —( ,, )

வாழ்க்கை வாழ்வதிலில்லை, நம் விருப்பத்திலிருக்கிறது. -இங்கிலாந்து

இறக்கும்வரை நாம் வாழத்தான் செய்வோம். —( ,, )

பிறப்பில் அழுகிறேம், இறப்பில் ஏன் என்பதைக் காண் கிறேம். —பல்கேரியா

வாழ்க்கை வேண்டுமானல், நாட்களை விலை கொடுத்து வாங்க வேண்டும். —( ,, )

பிறக்கும்பொழுது அழுதுகொண்டு வந்தோம், போகும் பொழுதாவது சிரித்துக்கொண்டு செல்லும்படி வாழ வேண்டும். -எஸ்டோனியா

வாழ்க்கை ஒரு போராட்டம். —( ,, )

வாழ்க்கை என்பது அடித்தல், அல்லது அடிபடுதல். —ரஷ்யா

மரணத்திற்கு அஞ்சவேண்டாம், வாழ்க்கைக்கு அஞ்சு. —( ,, )

மனிதனின் வாழ்க்கை ஒரு குழந்தையின் கையிலுள்ள முட்டை போன்றது. -ருமேனியா

மனிதர்கள் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் இறக்கும் பொழுது விழிப்படைகிறார்கள். -குர்ஆன்

பூமியில் மனிதனின் வாழ்க்கை ஒரு போராட்டம். -ப.ஏற்பாடு

நீண்ட வாழ்வு நெடுந் துயரங்களுள்ளது. -இங்கிலாந்து

எவ்வளவு காலம் நாம் வாழ்ந்தோம் என்பது முக்கியமில்லை, எவ்வளவு நேர்மையாக வாழ்ந்தோம் என்பதே முக்கியம். -( ,, )

வாழ்க்கை ஒரு தறி, அதில் மாயை (என்ற துணி) நெய்யப்படுகின்றது. -( ,, )

சிந்தனை தான் வாழ்க்கை. -காலரிட்ஜ்

வாழ்க்கை, இருமுறை சொன்ன கதையைப்போல், சலிப்பாயுள்ளது. -ஷேக்ஸ்பியர்

வாழ்க்கை (தறியிலுள்ள) ஓர் ஓடம். -ஷேக்ஸ்பியர்

நல்லதும் கெட்டதுமான நூல்களைக் கலந்து நெய்ததுதான் வாழ்க்கை. -( ,, )

எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை...... -வோர்ட்ஸ்வொர்த்

நாம் வாழ்கிறோம், மடிகிறோம்: இரண்டில் எது நல்லது என்று எனக்குத் தெரிந்ததைவிட உங்களுக்கும் தெரியாது. -பைரன்

மனிதன் காற்றை (மட்டும்) உட்கொண்டு வாழ்ந்திருக்க முடியாது. -ஃபிரான்ஸ்

வாழ்க்கை ஒரு கோட்டை, அதைப்பற்றி நம் அனைவருக்கும் ஒன்றும் தெரியாது. -( ,, )

சிறந்த வாழ்வைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள், பழக்கம் அதை இன்பமாக்கும். -கிரீஸ்

வாழ்க்கையில் திருப்தியைவிட அதிருப்தியே அதிகம். -( ,, )

வாழ்க்கை அபாயகரமான கடல் யாத்திரை. -( ,, )

வாழ்க்கை ஒரு மேடை, உங்கள் பாகத்தை நடிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். —கிரீஸ்

சந்தோஷமாயிருப்பவர்களுக்கு வாழ்க்கை சுருக்கம், துக்கமாயிருப்பவர்களுக்கு வாழ்க்கை நீண்டது. -( ,, )

இன்று வாழுங்கள், பழமையை மறவுங்கள். -( ,, )

வாழ்க்கை தீமையில்லை, தீமையாக வாழ்வதிலேயே தீமை உள்ளது. -( ,, )

நல்லதோ, கெட்டதோ நாம் அனைவரும் வாழத்தான் வேண்டும். -இதாலி

நன்றாக வாழ்வதற்குச் சொற்ப வாழ்வே போதுமானது. —லத்தீன்

நீ வாழ்ந்திருக்கும் வரை, எப்படி வாழவேண்டும் என்பதைக் கற்றுக்கொண்டேயிரு. -( ,, )

வாழ்க்கை பயன்படுத்தப் பெறுவதற்காகவே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. -லத்தீன்

நாளையே மரிக்க வேண்டியவனைப் போல வாழ்ந்து கொண்டிரு. -( ,, )

நாம் வாழத் தொடங்கிக்கொண்டேயிருக்கிறோம், ஆனால் வாழ்வதில்லை. -( ,, )

நாம் வாழ்க்கையைச் சிறு துண்டுகளாக்கி வீணாக்குகிறோம். -( ,, )

செத்துக்கிடக்கும் சிங்கத்தைவிட உயிருள்ள சுண்டெலி மேல். -ரஷ்யா

மரணம் வரும் வரையில் எல்லாம் வாழ்க்கைதான். -ஸ்பெயின்

தலைசிறந்த மரணத்தைவிட, மட்டமான வாழ்க்கையும் மேலானது. -யூதர்

# ஆடவர்

மனிதன் ஆறு—பெண் ஏரி. –குர்திஸ்தானம்

பத்து நாள் பெண்ணுயிருப்பதைவிட ஒரு நாள் ஆணுயிருப்பது மேல். –( ,, )

ஆணும் பெண்ணும் மண்வெட்டியும் வாளியும்போல. –( ,, )

பெண் ஒரு கோட்டை-ஆண் அவள் கைதி. –( ,, )

ஆடவர் நெல், பெண்டிர் குத்திய அரிசி. –சயாம்

[நெல் தானுக முளைக்கும், அரிசி முளைக்காது.]

மனிதர்களுக்குக் குணத்திற்கு முன்னுல் அறிவு தேவை; பெண்களுக்கு அறிவுக்கு முன்னுல் குணம் தேவை. –ஜெர்மனி

தனியாயிருக்கும் பிரமசாரி மயில், காதல் புரிய ஒரு கன்னி கிடைத்தவன் சிங்கம், கலியாணமானவன் கழுதை. –( ,, )

பிரமசாரியும் நாயும் எதையும் செய்யலாம். –போலந்து

மணவாழ்க்கையைப் புகழ்ந்து பேசு; ஆனுல் நீ தனித்திரு. –இதாலி

பிரமசாரி தண்ணீரில்லாத வாத்துப் போன்றவன். –ரஷ்யா

தினசரி க்ஷவரம் செய்துகொள்வதைவிட வருடத்திற்கு ஒரு பிள்ளை பெறுவதே எளிது. –( ,, )

[ரஷ்ய சிப்பாய்கள் இவ்வாறு தங்கள் மனைவியரிடம் சொல்வது வழக்கம்.]

ஆடவர் அழகை ஒரு குணமாகப் பார்க்கின்றனர்; பெண்கள் குணத்தை அழகாகப் பார்க்கின்றனர். –ஸ்பெயின்

சேவல் தன் குப்பை மேட்டிலிருந்துதான் கூவும், கோழி ஊரெங்கும் சுற்றிக் கூவிவரும். –ஸ்பெயின்

பொன்னுக்குச் சோதனை நெருப்பு; பெண்ணுக்குச் சோதனை பொன்; மனிதனுக்குச் சோதனை பெண். –அமெரிக்கா

பத்து மனிதரில் ஒன்பது பேர் பெண்கள். –துருக்கி

[பெரும்பாலோர் ஆண்மையில்லாதவர்கள்.]

ஆண்பிள்ளையின் சொற்கள் அம்பு போன்றவை; பெண் பிள்ளையின் சொற்கள் ஒடிந்த விசிறிபோன்றவை.
—சீன

பெண் அடிமையாயிருந்தால், ஆண் சுதந்திரமாக யிருக்க முடியுமா? —ஷெல்லி

மற்றவர்களுடைய பெண்களிடத்திலும், பணத்தினிடத்திலும் விளையாட வேண்டாம். —இங்கிலாந்து

## பெண்கள்

பிராணிகளின் படைப்பில் பெண்ணே முதன்மையான எழிலுடையவள். —யூதர்

இயன்ற பொழுதெல்லாம் பெண்கள் சிரிப்பார்கள், அழ வேண்டுமென்று தீர்மானித்து விட்டால், அழுவார்கள்.
—ஃபிரான்ஸ்

பெண் என்றால் பேயும் இரங்கும். —தமிழ்நாடு

ஒவ்வொரு மனிதனும் பெண்ணின் மகன். —ரஷ்யா

பெண்ணே, உன்னிடம் மூன்று நல்ல குணங்களும், நாலு லட்சம் தீய குணங்களும் இருக்கின்றன. நல்லகுணங்கள்: இசை பாடுதல், (இறந்த கணவனுடன்) சதியாக எரிதல், பிள்ளைகள் பெறுதல். —இந்தியா

மனிதனுக்குப் போர் எப்படியோ, அப்படிப் பெண்ணுக்குப் பிரசவம். —( ,, )

பெண்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளச் சயித்தான்கூடப் பிரார்த்தனை செய்கிறான். ( ,, )

அத்திப்பூவையும், வெள்ளைக் காகத்தையும், நீரிலுள்ள மீனின் காலையும் பார்த்தாலும் பார்க்கலாம், ஒரு பெண்ணின் மனத்திலுள்ளதைப் பார்க்கவே முடியாது.
—( ,, )

பெண்ணின் பேச்சிலே தேன் இருக்கிறது, உள்ளத்திலே நஞ்சைத் தவிர வேறில்லை. —( ,, )

ஆடவர்களே இல்லாவிட்டால், பெண்கள் அனைவரும் கற்புடையவர்களே. –இந்தியா

ஏணியில்லாமலே தூக்கில் ஏற வேண்டுமானால், ஒரு பெண்ணின் உதவியால் முடியும். –இலங்கை

கோழிதான் சேவலைக் கூவச் சொல்லுகிறது. –ஜப்பான்

நாவுதான் பெண்ணுக்கு வாள், அது துருப்பிடிப்பதே யில்லை. –( ,, )

பெண் மனிதனின் குழப்பம். –லத்தீன்

பெண்புத்தி பின்புத்தி. –தமிழ்நாடு

வயதுவந்த பெண் (தீர்வை கட்டாமல்) கடத்தி வந்த உப்பைப் போன்றவள். –சீனா

[விரைவிலே வெளியேற்ற வேண்டும்.]

பெண்ணின் உரோமத்தால் பெரிய யானையையும் கட்டிப் பிடிக்கலாம். –( ,, )

இளமங்கையை வீட்டில் புலிபோல் காத்துவர வேண்டும். –( ,, )

ஆடவர்கள் இதயங்களால் சிரிப்பார்கள், பெண்கள் உதடுகளால் மட்டும் சிரிப்பார்கள். –அரேபியா

பெண்பிள்ளை பயணம் போகிறாள் என்றால், ஓர் ஆண்பிள்ளை அவளுக்குக் கதவைத் திறப்பதுதான் காரணம். –( ,, )

ஒரு நல்ல பெண் ஏழு பிள்ளைகளுக்கு மேல். –ஆர்மீனியா

உனக்கு ஓர் இரகசியம் தெரியவேண்டுமா? ஒரு குழந்தை, பயித்தியக்காரன், குடிகாரன், அல்லது ஒரு பெண்ணிடம் கேட்டுப் பார். –( ,, )

ஆணைவிடப் பெண்களுக்குப் பசி இரட்டிப்பு, புத்தி நான்கு மடங்கு, ஆசைகள் எட்டு மடங்கு அதிகம். –பர்மா

பெண்களை அழவிடுவதில் மனிதர்கள் கவனமா யிருக்க வேண்டும்; ஏனெனில் ஆண்டவன் அவர்களுடைய கண்ணீர்த் துளிகளை எண்ணிப் பார்க்கிறான். –யூதர்

கழுதை ஏணிமேல் ஏறும்பொழுது, பெண்களிடம் நாம் ஞானத்தைக் காணலாம். —யூதர்

பெண்ணுக்குக் கூந்தல்தான் நீளம், மூளை கட்டை. —கால்மிக்

பெண் முற்றிலும் ஆணின் உடைமையாகாள். —குர்திஸ்தானம்

மன்னன், மாது, குதிரை—மூன்றையும் நம்பவேண்டாம். —பாரசீகம்

பெண்ணால் துயரமே வரும், ஆயினும் பெண் இல்லாத வீடே இருக்க முடியாது. —( ,, )

இரண்டு பெண்களும் ஒரு வாத்தும் இருந்தால் போதும்—அது ஒரு சந்தையாகிவிடும். —( ,, )

பெண்பிள்ளைக்கு இருமுறை பயித்தியம் பிடிக்கும்: அவள் காதல்கொண்ட சமயம், தலை நரைக்கத் தொடங்கும் சமயம். —( ,, )

குடியானவனுக்கு வேண்டியது நிலம், பிரபுவுக்குக் கௌரவங்கள், சிப்பாய்க்கு யுத்தம், வியாபாரிக்குப் பணம், விவசாயிக்கு அமைதி, தொழிலாளிக்கு வேலை, சித்திரக்காரனுக்கு அழகு, பெண்ணுக்கு உலகம் முழுவதும் தேவை. —( ,, )

பாடும் பெண்ணுக்கு அகமுடையான் தேவை. —அல்பேனியா

அழகான பெண்ணும், நீண்ட கிழிசலுள்ள அங்கியும் எந்த ஆணியிலும் மாட்டிக் கொள்ளும். —இங்கிலாந்து

விகாரமான ஸ்திரீ வயிற்றுவலி, அழகுள்ளவள் தலைவலி. —( ,, )

பத்துவயதில் பெண் தேவகன்னியா யிருப்பாள், பதினைந்தில் கள்ளமற்ற முனிவரைப் போலிருப்பாள், நாற்பதில் சயித்தானுவாள், எண்பதில் சூனியக்காரியாவாள். —இங்கிலாந்து

பெண்ணின் முன்பாகத்திற்கும் கழுதையின் பின்பாகத்திற்கும், பாதிரியாரின் எல்லாப் பாகங்களுக்கும் எச்சரிக்கையா யிருக்க வேண்டும். —( ,, )

பெண்களுக்கும், குருமார்களுக்கும், கோழிகளுக்கும் எவ்வளவு இருந்தாலும் போதாது. —இங்கிலாந்து

பெண்பிள்ளை சயித்தானை வென்று விடுவாள். —அயர்லந்து

உயிருள்ளவரை பெண்களுக்கு வர்ணங்களில் ஆசையிருக்கும். —( ,, )

சணலை நெருப்பிலிருந்து காப்பது கஷ்டம். —ஸ்காட்லந்து

வாயாடியின் வாய் சயித்தானின் அஞ்சல் பை. —வேல்ஸ்

பெண்கள் சயித்தானின் சாட்டைகள். —( ,, )

பெண் உள்ளம் தாமரை இலைமேல் உருளும் நீர்த்துளிபோல் நிலையற்றது. —சயாம்

உறுதியான செருப்பு வேண்டுமானல், ஒரு பெண்ணின் நாவை அடித்தோலாக வைத்துத் தைக்க வேண்டும்—அது ஒரு போதும் தேயாது. —ஃபிரான்ஸ்

மூன்று விலங்குகளே தம்மைச் சிங்காரித்துக் கொள்வதில் நேரத்தைக் கழிப்பவை—அவை பூனைகள், ஈக்கள், பெண்கள். —( ,, )

மனிதனின் பணப் பைக்காகவே பெண் படைக்கப் பெற்றிருக்கிருள். ( ,, )

ஆயுதங்களையும், பெண்களையும், பூட்டுக்களையும் தினந் தோறும் பார்த்துவர வேண்டும். —ஜெர்மனி

கன்னிப் பருவம் சாந்திமயம், கற்பு முக்தி நிலை, விவாகம் சிறைவாசம். —ஜெர்மனி

கன்னிப் பருவம் கதிரவன், கற்பு சந்திரன், விவாகம் இரவு. —( ,, )

ஒரு கன்னி எதையும் வாங்கவும் கூடாது, கொடுக்கவும் கூடாது. —( ,, )

ஒரு சேவல் பன்னிரண்டு கோழிகளை அடக்கியாளும், ஒரு பெண் ஆறு ஆடவர்களை அடக்கியாள்வாள். —( ,, )

துணையில்லாமல் செல்லும் பெண்ணுக்கு எல்லோரும் துணையாகச் சுற்றுவார்கள். —( ,, )

நூறு தெள்ளுப் பூச்சிகளைக் காத்துவிடலாம், ஒரு கன்னியைக் கட்டிக் காப்பது கஷ்டம். —போலந்து

கெட்ட பெண்ணிடம் அவளைப் புகழ்ந்து ஒரு வார்த்தை சொல்லு; நல்ல பெண்ணிடம் உன் விருப்பம் போல் பேசு. —போலந்து

கன்னிப் பெண்ணிடம் உன் விருப்பம் போல் நடக்கலாம். விதவையிடம் அவள் விருப்பம் போலவே நீ நடக்க வேண்டும். —( ,, )

பெண்ணின் யோசனையால் பயனில்லை யென்றாலும், அதை ஏற்றுக் கொள்ளாதவன் பாடு அவலம்தான். —வேல்ஸ்

நீண்ட தலைக்காரிக்கு ஆழமில்லாத உள்ளம். —பல்கேரியா

செல்லமாக வளர்ந்த பெண் நூல் நூற்க மாட்டாள்.—( ,, )

[மேலை நாடுகளில் கம்பள நூல் நூற்றல் கன்னியர் செய்யவேண்டிய தொழில்.]

பெண்கள் சீட்டியடித்தால், சயித்தானுக்குச் சிரிப்பு அடங்காது. —ஜெர்ஸீ

அத்தையிடம் ஒரு விஷயம் சொன்னால் போதும், அகில மெல்லாம் பரவிவிடும். —ஸெக்

பன்னிரண்டு வயதுவரை உன் மகளுக்குத் தலை வாரிவிடு; பதினாறு வயதுவரை பாதுகாத்து வை; பின்னர் எவன் மணந்து கொள்ள வந்தாலும், அவளைக் கொடுத்து, நன்றியும் சொல்லு. —( ,, )

நாய்க்கு மேலாக நாம் குரைக்க முடியாது, காகத்திற்கு மேலாகக் கரைய முடியாது, ஒரு பெண்ணுக்கு மேலாகச் சண்டைபோட முடியாது. —( ,, )

ஒரு பெண் சீட்டியடித்தால், ஏழு ஆலயங்கள் அதிரும். —( ,, )

பெண்ணுக்கு மௌனத்தைப் போன்ற ஆபரணம் வேறில்லை, ஆனால் அவள் அதை அணிவது அபூர்வம். —டென்மார்க்

வயிரம் போன்ற மகள் மனைவியாகும் போது கண்ணாடியாக மாறுகிறாள். —ஹாலந்து

பெண்களைப் பெற்றவன் எப்பொழுதுமே மேய்க்க வேண்டிய ஆயன். —( ,, )

புதர்களெல்லாம் பெண் இனம். —எஸ்டோனியா
[பெருகக் கூடியவை.]

ஒரு பெண் மற்றொருத்தியைப் புகழ்ந்து ஒரு போதும் பேச மாட்டாள். –( ,, )

ஒரு பெண்ணின் பாவு ஒன்பது பெண்களின் ஊடு. -( ,, )

மனிதன் வேலை காரணமாக வெளியே போகிறான், பெண் தன்னைப் பிறர் பார்ப்பதற்காகப் போகிறாள். –ஃபின்லந்து

பெண்ணை அவள் இறந்த பிறகும் நம்பவேண்டாம். —கிரீஸ்

கடல், தீ, பெண்கள்: மூன்றும் தீமைகள். -( ,, )

பெண்ணின் ஆயுதங்கள் கண்ணீர்த் துளிகள். -ஜியார்ஜியா

அதிக வயதாகியுங் கன்னியா யிருப்பவள் அஞ்சலில் சேராத கடிதம் போன்றவள். –ஹங்கேரி

கோபம் வந்த பெண் கரையில்லாத கடல். –லத்தீன்

கன்னியின் இதயம் இருண்ட கானகம். -ரஷ்யா

இரண்டு பெண்கள் சேர்ந்தால் ஒரு கடை, மூவர் சேர்ந்தால் ஒரு சந்தை. -( ,, )

சிரிக்கிற பெண்ணையும் அழுகிற மனிதனையும் நம்ப வேண்டாம். -( ,, )

எந்தப் பெண்களைப் பற்றி அதிகமாய்ப் பேச்சில்லையோ அவர்கள் மிகவும் நல்லவர்கள். –சைலீஷியா

அழகுக்கும் கற்புக்கும் இடைவிடாத போர் இருந்தே வரும். –ஸ்பெயின்

மூன்று பெண்களும், ஒரு தாயும்—ஆகத் தந்தைக்கு நான்கு சயித்தான்கள். -( ,, )

கற்புடைய கன்னியும், நொண்டியும் வீட்டிலேயேயிருப்பது மேல். –( ,, )

கெட்ட ஸ்திரீகளைக் காவல் காப்பது வீண் வேலை. -( ,, )

தன்னையே அதிகமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கும் பெண் வீட்டை நாசமாக்குவாள். -( ,, )

கடலில் உப்பைத்தான் பெறலாம், பெண்ணிடம் தீமையைத் தான் பெறலாம். --ஸ்பெயின்

கூவுகிற கோழியும், லத்தீன் படித்த பெண்ணும் நல்ல முடிவை அடையமாட்டார்கள். –( ,, )

பெண்கள் கிடைத்ததை மதிக்கமாட்டார்கள், மறுத்ததையே விரும்பி வாடுவார்கள். -( ,, )

கெட்ட பெண்களிடமிருந்து உன்னைக் காப்பாற்றும்படி ஆண்டவனை வேண்டு; நல்ல பெண்களிடமிருந்து நீயே உன்னைக் காத்துக்கொள். –யூதர்

நாயைப் போன்றவள் பெண்; எலும்பைக் காட்டினால் நாய் ஏமாந்து பின்னால் வரும். –ஆப்பிரிகா

மனிதரைத் தவிர, மற்ற விலங்குகள் அனைத்திலும் பெண் இனமே மேலானது. –அரேபியா

தந்தைக்கு அடங்கி நடத்தல், கணவனுக்கு அடங்கி நடத்தல், மகனுக்கு அடங்கி நடத்தல்—இம்மூன்றுமே ஒரு பெண்ணுக்குரிய மூன்று பண்புகள். -சீனு

அன்பான சில வார்த்தைகளே பெண்ணுக்கு அணிகலன். –டென்மார்க்

பெண்கள் மூடர்களாயிருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை: மனிதர்களுக்குப் பொருத்தமாயிருப்பதற்காகவே சர்வவல்லமையுள்ள கடவுள் அப்படிப் படைத்திருக்கிறார். -ஜியார்ஜ் எலியட்

பெண்களும் யானைகளும் மறப்பதேயில்லை. -பார்க்கர்

பெண்கள் அதிக வளர்ச்சியடைந்த குழந்தைகளைத் தவிர வேறில்லை. –செஸ்டர்ஃபீல்டு

ஆடவர்களால்தான் பெண்கள் தங்களுக்குள் ஒருவரையொருவர் வெறுக்கின்றனர். -ஃபிரான்ஸ்

எந்தக் கண்ணாடியும் ஒரு பெண் அழகியில்லையென்று சொல்லியதில்லை. -( ,, )

அழகிய பெண் செய்வதெல்லாம் சரிதான். -ஜெர்மனி

கண்ணாடிக்குள் இருக்கும் பெண்ணையே ஒவ்வொரு பெண்ணும் நேசிக்கிருள். —ஜெர்மனி

நித்தியமான பெண்மை இயல்பு நம்மை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்கின்றது. —கதே

மௌனம் பெண்ணுக்குப் பெருந்தன்மை யளிக்கிறது. —ஸாபாகிளிஸ்

மனிதனுக்கு உயர்ந்த நன்மையும் பெரிய நோயும் பெண்ணாலேயே கிடைக்கின்றன. —கிரீஸ்

ஒரு பெண்ணுக்குப் பின்னால் செல்வதைவிட, ஒரு மனிதன் சிங்கத்தின் பின்னால் செல்வது மேல். —யூதர்

பெண், விருப்போ வெறுப்போ அடையும்பொழுது, எதையும் செய்யத் துணிகிருள். —லத்தீன்

செல்வமுள்ள ஸ்திரீயைப்போல் சகிக்க முடியாதது வேறில்லை. —( ,, )

தீய யோசனை சொல்வதில் பெண்கள் ஆடவர்களை வென்று விடுவார்கள். —( ,, )

தன் முகத்தைப் பற்றியே பெருமைப்படும் பெண்ணால் வீடு பாழாகும். —ஸ்பெயின்

ஒரு பெண் அழகாயிருப்பதாக நாம் ஒரு முறை சொன்னால், அதையே சயித்தான் அவளிடம் பத்துமுறை சொல்வான். —( ,, )

நன்ருக உடையணியும் ஒரு பெண் தன் கணவன் வேறு பெண்ணை நாடாமல் காத்துக் கொள்ளமுடியும். —( ,, )

நல்ல திராட்சை மதுவைப்போல், பெண்ணும் இனிமையான விஷம். —துருக்கி

ஊசியில்லாத பெண் நகமில்லாத பூனை. —எஸ்டோனியா

[தையல் வேலை பெண்ணுக்கு அவசியம்.]

ஒரு பெண்ணைப் பற்றி அவதூறு சொல்வதைப் பார்க்கினும் ஓர் ஆலயத்தை எரிப்பது குறைந்த பாவம். —செர்பியா

கெட்ட பெண்ணையும் புகழ்ந்து பேசு; நல்லவளைப் பற்றி எப்படியும் பேசலாம். —( ,, )

# காதல்

நான்கு கண்கள் சந்தித்ததும், இதயத்தில் காதல் தோன்றிற்று. —இந்தியா

காமம், நெருப்பு, இருமல் இம்மூன்றும் மறைக்க முடியாதவை. —( ,, )

இளம் காதலர்கள் விரும்புகிறார்கள், விவாகமான மனிதர்கள் வருந்துகிறார்கள். —( ,, )

காதல் சாதி வேற்றுமைகளைக் கண்டு சிரிக்கின்றது. —( ,, )

ஒரு மனிதன் பெண்ணின் பின்னால் ஓடினால் திருமணம்; ஒரு பெண் மனிதன் பின்னால் ஓடினால் அவளுக்கு அழிவு. —( ,, )

காதல், கஸ்தூரி, இருமல் மூன்றையும் அடக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது. —( ,, )

காதலன் கண்ணுக்கு அம்மைத் தழும்புகளும் அதிருஷ்டக் குறிகளாகும். —ஜப்பான்

காதலுக்கும் தொழு நோய்க்கும் தப்புவோர் சிலரே. —சீனா

அதிருஷ்டமுள்ளவன் ஒரு நண்பனைச் சந்திக்கிறான், அதிருஷ்டம் கெட்டவன் ஓர் அழகியைச் சந்திக்கிறான். —( ,, )

காதலையும் கர்ப்பத்தையும் மறைத்து வைக்க முடியாது. —அரேபியா

காதல் ஏழு விநாடி, துக்கம் வாழ்க்கை முழுதும். —( ,, )

உன் காதலுக்கு ஒரு மணி நேரம், உன் இறைவனுக்கு ஒரு மணி நேரம் செலவிடு. —( ,, )

தூக்கம் வந்து விட்டால், தலையணை தேவையில்லை; காதல் வந்து விட்டால், அழகு தேவையில்லை. —ஆப்கானிஸ்தானம்

காதலும் பேராசையும் போட்டியைச் சகிக்கமாட்டா. —ஃபிரான்ஸ்

காதலுடனும் நெருப்புடனும் மனிதன் பழகிப் போகிருன்.
—ஃபிரான்ஸ்

பெண்கள், காடைகள், வேட்டை நாய்கள், ஆயுதங்கள்—
இவைகளில் ஓர் இன்பத்திற்காக ஆயிரம் வேதனைகள்
–( ,, )

காதலைத் தடுத்தல் அதைத் தூண்டிவிடுவது போன்றது.
–( ,, )

காதல் வந்து விட்டால், கழுதைகளும் நடனமாடும்.–( ,, )

அதிகக் காதலுள்ளவர்கள் மிகக் குறைவாகப் பேச
வேண்டும். –ஸ்காட்லந்து

காதலுக்கும் செல்வத்திற்கும் துணை வேண்டியதில்லை.
–செர்பியா

பெண்ணின் காதல் சயித்தானின் வலை. –( ,, )

திருமண இரவுதான் காதலின் கடைசி இரவு. –சைலீஷியா

காதல் இனிமையான சிறைவாசம். –ஸ்லாவேகியா

கெட்டிக்காரப் பெண், தான் காதலிப்பவனை விட்டு,
தன்னைக் காதலிப்பவனை மணப்பாள். –( ,, )

செயல்களே காதல், இனிமையான சொற்களல்ல.
–ஸ்பெயின்

காதல் வெட்கப்பட்டால், அது உண்மையானதன்று.
–( ,, )

ஒரு காதல் மற்ருென்றை வெளியேற்றிவிடும். –( ,, )

காதல் சுளுக்குப் போன்றது, இரண்டாம் தடவை அது
எளிதில் வந்துவிடும். –( ,, )

ஒரு பெண்ணின் காதல் கூடையிலுள்ள தண்ணீர்
போன்றது. –ஸ்பெயின்

காதலின் பார்வையில் செம்பு தங்கமாயிருக்கும், ஏழைமை
செல்வமாகும். –( ,, )

'சூப்'பிலும் காதலிலும் முதலாவதுதான் சிறந்தது. –( ,, )

தேர்ந்தெடுப்பது என்பது காதலில் இல்லை. –( ,, )

நெருப்புக்குக் காற்று எப்படியோ, அப்படிக் காதலுக்குக் பிரிவு. -ஸ்பெயின்

சாளரக் கம்பிகளின் இடைவழியாகவே காதலுக்கு உயிர் வருகிறது. -( ,, )

காதலர் மற்றவர் கண்களெல்லாம் அவிந்து விட்டது போல எண்ணுவர். -( ,, )

காதலர்களுக்குத் தக்க நேரம் தெரியும். -ஜெர்மனி

காப்பியும் காதலும் சூடா யிருந்தால்தான் உருசி. -( ,, )

காதல்தான் காதலை வெல்ல முடியும். -( ,, )

காதல் அணைந்தபின் கரித்துண்டுகளே மிஞ்சும். -( ,, )

காதல் அகமெலி, கல்யாணம் காட்டுப் பூனை. -( ,, )

காதலின் உச்சத்தில் பேச்சுக் குறைந்துவிடும். -( ,, )

காதல் குருடன்று, ஆனால் அது பார்ப்பதில்லை. -( ,, )

காதலுக்குக் காலம் கிடையாது. -( ,, )

காதலர்களுக்கு காதவழி ஓர் அடியாகத் தோன்றும். -( ,, )

காதலின் கண்ணுக்கு ரோஜா மலர்தான் தெரியும், முட்கள் தெரியமாட்டா. -( ,, )

அழகைக் காதலித்தல் என்பதில்லை, காதலித்ததே அழகாகும். -( ,, )

காதற் கடிதங்களுக்குத் தேதி தேவையில்லை. -( ,, )

வேட்டையிலும் காதலிலும் ஒருவருக்குத் தொடங்கத் தெரியும், எங்கு முடிப்பது என்பது தெரியாது.-( ,, )

காதலர்கள் பேச வேண்டிய விஷயம் அதிகம், ஆனால் அது ஒரே பழைய விஷயம்தான். -( ,, )

காதலர்கள் நேரத்தை ஆசையைக் கொண்டு அளக்கின்றனர். -( ,, )

சிறு ஊடல் காதலைப் புதுப்பிக்கும். -( ,, )

எல்லா இடங்களிலும் கண்களின் பாஷை ஒன்றுதான். -இங்கிலாந்து

முத்தங்கள் திறவுகோல்கள். -( ,, )

ஒருபெண்ணையும் காதலிக்காதவன் பன்றியிடம் பால் குடித்திருப்பான். —இங்கிலாந்து

காதலுக்கு மருந்தில்லை, மருத்துவனுமில்லை. —அயர்லந்து

காதல் ஒன்றுதான் பங்காளிகளை அனுமதிக்காது. —பல்கேரியா

ஒருவன் சகோதரனைத் தேடிக் கடல் வரை போவான்; காதலியைத் தேடிக் கடலுக்குள்ளேயும் போவான். —பல்கேரியா

உருளைக் கிழங்கையும், காதலனையுமே ஒரு பெண் தானாகத் தேர்ந்தெடுக்கிறாள். —ஹாலந்து

காதற் கடிதங்களை எழுதுவோர் மெலிகின்றனர், கொண்டு கொடுப்பவர்கள் கொழுக்கிறார்கள். —( ,, )

[காதலரின் தூதர்களுக்கு இருபக்கங்களிலும் வெகுமதிகள் நிறையக் கிடைக்கும்.]

வானத்தில் பறவையின் பாதையைக் காணமுடியாது, கன்னியை நாடும் காதலன் பாதையையும் காண முடியாது. —எஸ்டோனியா

காதலில் துரு ஏறாது. —( ,, )

காதல் என்பது மலர், கலியாணத்தில் அது கனியாகும். —ஃபின்லந்து

காதல் நந்தவனம், கலியாணம் முட்புதர். —( ,, )

காதல் உண்டாக்கும் புண்ணை அதுவே ஆற்றிவிடும். —கிரீஸ்

காதல் மடமை இரண்டுக்கும் பெயரில்தான் வேற்றுமை. —ஹங்கேரி

கனவிலும் காதலிலும் இயலாத காரியமே இல்லை. —( ,, )

அடிக்கடி முத்தமிட்டால் குழந்தையை எதிர்பார்க்க வேண்டியதுதான். —ஐஸ்லந்து

கலியாணத்திற்குப் பின்னால் காதல் வளரும். —( ,, )

காதல் கொண்டவர்களின் கோபம் சிலந்தி வலை போன்றது. —இதாலி

ஒரே பெண்ணையோ, ஒரே 'பஸ்'ஸையோ தொடர்ந்து ஓட வேண்டாம், பின்னால் வேறு கிடைக்கும். -இத்தாலி

காதலிக்கும் காலத்தில் ஜூபிடரும் கழுதையாவார்.
-லத்தீன்

[ஜூபிடர்-தேவர்களின் அதிபதியான கடவுள்; கிரீஸில் இவரை 'சீயஸ்' என்பர்.]

பழைய காதல் ஒரு சிறைச்சாலை. -( ,, )

காதலின் தூதுவர்கள் கண்கள். -லத்தீன்

காதலிலே தோன்றும் கோபம் போலியானது. -( ,, )

காதலர் கோபம் காதலுக்குப் புத்துயிர். -கிரீஸ்

இருவரைக் காதலிக்கும் ஒரு பெண் இருவரையும் ஏமாற்றுவாள். -போர்ச்சுகல்

செம்பு நாணயம் துருப்பிடித்த காதலுக்குத்தான் சரி.
-ஸ்பெயின்

காதல் ஒரு வளையம், வளையத்திற்கு முடிவே கிடையாது.
-( ,, )

ஒருவன் மீது காதல் தோன்றி விட்டால், அவன் சூளிக்காமலிருக்கும் பொழுதே, வெண்மையாகத் தோன்றுவான். -( ,, )

ஒருத்தி இனிமையா யிருக்கிறாள் என்பதற்காகக் காதலிக்க வேண்டாம், வயதாகிவிட்டது என்பதற்காக அவளைத் தள்ளவும் வேண்டாம். -( ,, )

பஞ்சை நேசிப்பது போல் என்னை நேசி; நூல் அதிக மென்மையாகும் பொழுது அதிகப் பஞ்சை விட்டும், நூல் அறுந்தவுடன் ஒட்டியும் ஆதரவு காட்டுவது போல, என்னை வைத்துக் கொள்ளவும். -ஆப்பிரிகா

அவசரக் காதல் சீக்கிரம் சூடாகி, சீக்கிரம் குளிர்ந்து விடும். -இங்கிலாந்து

அரசர், கெய்ஸர், பிரபு, சட்டங்கள் ஆகிய அனைத்திலும் மேற்போனது காதல். -( ,, )

காதல்தான் காதலுக்குப் பரிசு. -( ,, )

காதலுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை. -இங்கிலாந்து

காதலின் இனிமைகளில் கண்ணீர் கலந்திருக்கும். ( ,, )

காதலுக்காக உயிரை விடுபவர்கள் அளவுக்கு அதிகமாகக் காதலிப்பவர்கள். -( ,, )

காதல் ஒருவகைப் போர் முறையாகும். -லத்தீன்

காதலிலும் மரணத்திலும் நம்வலிமை பயனில்லை.-ஸ்பெயின்

காதலே கள்வர்களைத் தயாரிக்கிறது; காதலை எந்தக் கள்வரும் கவர்வதில்லை. -சுவீடன்

காதல் தான் புக முடியாத இடத்தில் ஊர்ந்து சென்று விடும். -( ,, )

காதலால் வீரரானோர் பலர்; ஆனால் மூடரானோர் அவர்களை விட அதிகம். -( ,, )

நெருப்பு அருகிலிருந்து சுடும், அழகு தூரத்திலிருந்து சுடும். -சுவிட்சர்லந்து

காதலித்தால் சந்திரனைக் காதலி, திருடினால் ஒட்டகத்தைத் திருடு. -எகிப்து

காதல் கட்டுப்பாடற்ற கழுதை. -ஆப்பிரிகா

ரொட்டியும் உப்பும் இல்லாவிட்டால், காதல் இருக்க முடியாது. -போலந்து

காதல் முதலில் ஆடவனின் கண் வழியாகவும், பெண்ணின் காது வழியாகவும் நுழைகிறது. -( ,, )

முதன்மையான அன்பு தாயன்பு, அடுத்தது நாயன்பு, அதற்கும் அடுத்தது காதலியின் அன்பு. -( ,, )

## பெண் பார்த்தல்

தாயைப் பார்த்து மகளைக் கொள்ளு. -தமிழ்நாடு

வலுவில் வந்தவள் கிழவி. -( ,, )

கரையைப் பார்த்துச் சீலை எடு, தாயைப் பார்த்து மகளை எடு. -துருக்கி

மனைவியைத் தேர்ந்தெடுக்கும்பொழுது கிழவனின் பார்வை வேண்டும்; குதிரையைத் தேர்ந்தெடுக்கையில் இளைஞனின் பார்வை வேண்டும். —ஆர்மீனியா

அதிக அழகுள்ளவர்களைக் காட்டிலும் குருட்டுப் பெண் தேவலை. —பர்மா

ஒரு பெண்ணைப் பற்றித் தெரிந்துகொள்ள அவள் தாயை அறியவேண்டும்; மேலும் தெளிவாகத் தெரிந்து கொள்ள அவள் தாய்வழிப் பாட்டியைப் பற்றியும் விசாரித்து அறியவேண்டும். —சயாம்

காதைக் கொண்டு பெண்ணைப் பார், கண்ணைக் கொண்டு பார்க்க வேண்டாம். —போலந்து

கலியாணத்திற்குப் பெண் தேடி நெடுந்தூரம் செல்பவன் யாரையோ ஏமாற்றப் போகிறான். அல்லது தான் ஏமாறுவான். —இங்கிலாந்து

பெண் எடுத்தல் பக்கத்திலும், களவாடுதல் தூரத்திலும் இருக்க வேண்டும். —ஸெக்

செழிப்பான பண்ணையிலிருந்து குதிரையை வாங்கு; ஏழைப் பண்ணையிலிருந்து பெண்ணை வாங்கு. —எஸ்டோனியா

மாதாகோயிலுக்குச் செல்லும் பாதையிலிருந்து கொண்டு உனக்கு மனைவியைத் தேர்ந்தெடுக்காதே. —( ,, )

ஒரு மனைவியைத் தேர்ந்தெடுக்க மனிதனுக்குப் போதிய நேரம் இருக்கிறது. —ஃபின்லந்து

ஏழை வீட்டில் பெண் எடு, செல்வர் வீட்டில் குதிரை வாங்கு. —( ,, )

எல்லாப் பெண்களிலும் உனக்கு மிகவும் அருகிலுள்ள பெண்ணையே மணந்துகொள். —கிரீஸ்

குதிரைகள் வாங்கும் போதும், பெண் எடுக்கும் போதும், உன் கண்களை இறுக மூடிக்கொண்டு, கடவுளின் பொறுப்பில் விட்டுவிடவும். —லத்தீன்

முதலில் உணவுக்கு வழிசெய், பிறகு மனைவியைத் தேடிக் கொள்ளலாம். —நார்வே

மணப் பெண் தொட்டிலிலிருக்கும் பொழுது, மணமகன் குதிரையேறப் பழக வேண்டும். -ரஷ்யா

உபதேசியாரிடம் குதிரை வாங்காதே, விதவையிடம் பெண் கொள்ளாதே. -( ,, )

உனக்கு நல்ல மனைவி வேண்டுமானால், அவளை ஞாயிற்றுக் கிழமையில் தேர்ந்தெடுக்காதே. -ஸ்பெயின்

பெரிய இடத்துப் பெண்ணை விவாகம் செய்து கொண்டு, பாயில் படுத்துறங்கு. -ஆப்பிரிகா

குட்டையான பெண்ணை மணந்து கொண்டால், துணி அதிகம் தேவையிராது. ( ,, )

அத்தை மகளை விட்டுவிட்டு, வெளியில் பெண்ணெடுப்பவன் மூடன். -( ,, )

திருமணத்திற்கு முன்னால் கண்களைத் திறந்து வைத்துக் கொள், பின்னால் பாதிக் கண்ணை மூடிக்கொள். -( ,, )

பிறர் புகழும் குதிரையை வாங்கு, பிறர் குறை பேசும் பெண்ணை மணந்துகொள். -எஸ்டோனியா

## திருமணம்

ஒன்று இளமையிலேயே திருமணம் செய்துகொள், அல்லது துறவியாகிவிடு. -பல்கேரியா

குழந்தைக்குச் சோறு கொடுத்தால், தாய்ப்பாலை மறக்கும்; பெண்ணுக்கு கணவன் வந்தால், தாயை மறப்பாள். -இந்தியா

வீட்டைக் கட்டிப் பார், கலியாணத்தைச் செய்து பார். -தமிழ்நாடு

பணக்காரர்கள் சீதனம் கொடுத்துப் பெண்களுக்கு மணம் செய்கிறார்கள்; மத்திய வகுப்பினர் பெண்களைக் கொடுத்துப் பணம் சம்பாதிக்கிறார்கள். -சீனா

பதினைந்து ரூபாயில் ஒருவன் மனைவியைப் பெறலாம், ஆனால் ஒரு கோவேறு கழுதை வாங்க ஐம்பது ரூபாய் வேண்டும். -சீனா

விவாகமாகாத பெண்ணுக்கு ஒரு சிறகில் ஊனம்.
-அரேபியா

ஒருபெண், பிறந்த வீட்டில் குடியிருப்பதைவிட, மரக் கட்டையையாவது மணந்து கொள்ளல் நலம். -அரேபியா

நிலம் வாங்குவதற்கு என்றால், வேகமாக ஓடு; விவாகம் செய்து கொள்வதற்கு என்றால், மெதுவாக நட. -யூதர்

இளமையில் மணம் செய்துகொள், நீ இளமையா யிருக்கும் போதே பெரிய குழந்தைகளை அடைய முடியும்.
-குர்திஸ்தானம்

உடனிருந்து உண்பதும், குடிப்பதும், உறங்குவதுமே விவாகம் என்று நான் கருதுகிறேன். -ஃபிரான்ஸ்

ஆகக் கழிவான செருப்புக்கும் ஜோடி சேர்ந்துவிடும்.-( ,, )

ஓநாயை அடக்கிவைக்க அதற்கு விவாகம் செய்துவை.
-ஃபிரான்ஸ்

[முரடனாயுள்ள மைந்தன், மனைவி வந்தால், அடங்கி விடுவான்.]

இளமைத் திருமணம் நீண்டகால அன்பு. -ஜெர்மனி

அழகுக்காக கலியாணம் செய்து கொள்பவன் இரவு நேரங் களில் இன்பமாயும், பகல் நேரங்களில் துக்கமாயும் இருப்பான். -( ,, )

ஓராண்டு இன்பம் வேண்டுவோர் திருமணம் செய்து கொள் வது நலம்; இரண்டாண்டுகள் இன்பம் வேண்டு மானால், திருமணம் செய்யவேண்டாம். -( ,, )

திருமணம் என்பது காதல் நோய்க்கு வைத்தியசாலை.
-( ,, )

போருக்குப் போகும்போது ஒரு முறை தொழவும், கடலுக் குப் போகும் போது இருமுறை தொழவும், திருமணம் செய்யும் போது மும்முறை தொழவும். -( ,, )

ஒவ்வோர் ஆதாமுக்கும் ஓர் ஏவாள் இருப்பாள். –போலந்து

ஒரு மதுக்கிண்ணமும் பெண்ணும் அருகிலிருந்தால், ஒருவனுக்குப் பொழுது போவது தெரியாது. –( ,, )

மூன்று சகோதரர்களில் இருவர் மூளையுள்ளவர், ஒருவன் விவாகமானவன். –( ,, )

ஒருவன் மணந்து கொள்வது நல்லதுதான், ஆனால் மணமில்லாதிருப்பது அதைவிட நல்லது. –போலந்து

திருமணம் செய்வதற்கு முன்பு மூன்று வருடம் இஷ்டம் போல் வாழ்க்கை நடத்திக்கொள். –( ,, )

பெண்பிள்ளை விவாகத்திற்கு முன்னால் அழுவாள், ஆடவன் பின்னால் அழுவான். –( ,, )

கம்பளியை இரட்டையாக மடித்துப் போர்த்துக்கொண்டால், மேலும் குளிருக்கு அடக்கம்தான். –அயர்லந்து

[உறவினருக்குள் விவாகம் செய்து கொள்ளல் மிகவும் நல்லது]

முதல் ஆண்டு முத்தமிடும் ஆண்டு, இரண்டாம் ஆண்டு முட்டிப் பாயும் ஆண்டு. –அயர்லந்து

நீ உன் மனைவியை மணந்து கொள்ளும் போதே உன் குழந்தைகளையும் மணந்து கொண்டு விட்டாய். –( ,, )

[விவாகமானால், குழந்தைகளின் பாரத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.]

மனிதன் காதலிக்கும் பொழுது வசந்தம், கலியாண சமயத்தில் பனிக்காலம். –ஸ்காட்லந்து

பணத்திற்காகத் திருமணம் செய்து கொள்ள வேண்டாம்; பணம் குறைந்த வட்டிக்கு வெளியே கிடைக்கும். –( ,, )

பானையாக உருண்டு சென்று மூடியை கண்டுபிடிக்கும். –பல்கேரியா

[திருமணத்திற்கு ஜோடி சேரும்.]

கல்யாணம் ஒரு நாள், இரு நாள்தான், அதன் பலனோ நெடுநாள் இருக்கும். –ஸெக்

ஒரு முறை விவாகம் கடமை; இருமுறை தவறு; மும்முறை பைத்தியம். —ஹாலந்து

நாலு மரக்கால் நிலக்கரி கொடுத்தால், ஒரு நாயகன் கிடைப்பான்; ஆனல் ஒரு 'டன்' கோதுமை கொடுத்தால்தான் ஒரு பெண் கிடைப்பாள். —எஸ்டோனியா

சமையல் மோசமானல், ஒரு நாள் நஷ்டம்; அறுவடை மோசமானல், ஒரு வருட நஷ்டம்; விவாகம் மோச மானல் ஆயுள் முழுவதும் நஷ்டம். —எஸ்டோனியா

அதிகாலையில் எழுந்தவனும், இளமையில் மணந்தவனும் வருந்தியதில்லை. —( ,, )

கணவன் தலை, மனைவி இதயம்—இப்படியுள்ள திருமணம். இன்பமானது. —எஸ்டோனியா

மனிதர் தாமாக வரவேற்றுக் கொள்ளும் தீமை திருமணம். —கிரீஸ்

ஒவ்வொரு ஜாடிக்கும் ஒரு மூடி கிடைக்கும். —இதாலி [திருமணம்.]

'அம்மா! விவாகம் என்பது என்ன?'

'மாவரைத்தல், நூல் நூற்றல், குழந்தைகள் பெறுதல், அழுதல்.' —மான்டினீக்ரோ

காதல் சிறகுகளைக் கொண்டு பறக்கும், திருமணம் இரண்டு கழிகளின் உதவியால் நடந்து வரும். —ரஷ்யா

கலியாணத்தால் குளிர்ந்து போகாத காதல் நெருப்பு இல்லை. —( ,, )

திருமணம் என்றுதான் உண்டு, ஆனல் 'பிரிமணம்' என்று கிடையாது. —( ,, )

ஆண்டவனே, என்னை இரண்டாவது கலியாணத்திலிருந் தும், மூன்றுவிட்ட தாயாதிகளிடமிருந்தும் காப்பா யாக. —( ,, )

ஒரு சகோதரிக்குக் கலியாணமானல், அடுத்தவளுக்கும் ஆகும். ஒரு தொட்டி விற்ருல், அடுத்ததும் விலை யாகும். —செர்பியா

உன் மகளுக்குத் தக்க வரன் வந்தால், வெளியே போயிருக்கும் அவளுடைய தந்தையின் வரவைக்கூட எதிர் பார்க்க வேண்டாம். -ஸ்பெயின்

திருமணம் என்ற கோணியில் தொண்ணூற்றென்பது பாம்புகளும், ஒரு விலாங்கும் இருக்கும். -( ,, )

காதலுக்காகக் கலியாணம் செய்து கொள்பவன் துக்கத்தோடு வாழ வேண்டும். -( ,, )

திருமணம் செய்து கொண்டு அடங்கிக்கிட. -( ,, )

திருமணம் செய்து கொள்ள உறுதி கொண்டவன் அண்டை அயலார்களைப் பார்த்துக் கொள்வது நல்லது. -( ,, )

வீட்டைக் கட்டுபவனுக்கும் திருமணம் செய்துகொள்பவனுக்கும் எந்த நேரத்திலும் அபாயம் வரும். -சுவீடன்

கிழவன் ஒரு குமரியை மணந்து கொண்டால், அவன் இளைஞனாகி விடுவான், குமரி கிழவியாவாள். -யூதர்

உனக்கு உறவினர் இல்லாவிட்டால், திருமணம் செய்து கொள். -எகிப்து

கடவுள் ஒருவனைத் தண்டிக்க விரும்பினால், அவனுக்குத் திருமணம் பற்றிய நினைவை உண்டாக்குவார். -ஜெர்மனி

முதலாவது மனைவி இறைவனிடமிருந்து வருகிறாள்; இரண்டாவது மனைவி மனிதரிடமிருந்து வருகிறாள்; மூன்றாவது மனைவி சயித்தானிடமிருந்து வருகிறாள். -ஹங்கேரி

ஓர் ஏழை பணக்காரியை மணந்து கொண்டால், அவள் மனைவியல்லள்-யஜமானி. -கிரீஸ்

நான் விவாகம் செய்து கொள்ளவில்லை, என் தந்தையும் விவாகமில்லாது இருந்திருந்தால் எவ்வளவு நலமாயிருந்திருக்கும். -( ,, )

சமுதாயத்தின் முதற் கட்டுப்பாடு திருமணம். -லத்தீன்

திருமணத்தைப் புனிதமாக்குவது காதல் ஒன்றுதான், -டால்ஸ்டாய்

'என்ன' இவ்வளவு ஆத்திரம்?'
'நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்!'
'என்ன, முகம் வெளுத்திருக்கிறது?'
'நான் திருமணம் செய்து கொண்டு விட்டேன்!' —ரஷ்யா

## கணவன்

கணவனின் அன்பே மனைவியின் வாழ்க்கை. —ஜெர்மனி

தோட்டத்தின் நன்மை வேலி; வீட்டின் நன்மை குடியிருப்பு; பெண்ணின் நன்மை கணவன். —மலாய்

மனையாளின் குற்றங்களுக்குமணவாளனே பொறுப்பு; குரங்கு வளர்ப்பவன் அதன் சேட்டைகளுக்குப் பொறுப்பாளி. —இங்கிலாந்து

ஒடுக்கமான வீட்டில் விகாரமான மனைவியை உடையவனுக்குக் கவலையே யில்லை. —( ,, )

அதிருஷ்டமுள்ளவன் மனைவியை இழக்கிறான், அதிருஷ்டமில்லாதவன் குதிரையை இழக்கிறான். —ஜியார்ஜியா

மனைவி செய்யும் பாவங்களுக்குக் கணவனும் உடந்தை தான். —லத்தீன்

கணவன் என்பவன் தன் மனைவியின் தந்தை. —ரஷ்யா

ஊர் முழுவதும் தெரிந்த விஷயம் கணவனுக்கு மட்டும் தெரியாது. —ருமேனியா

ஏழு வருடங்கள் கழியுமுன்னால் உன்மனைவியைப் புகழாதே. —ரஷ்யா

அதிருஷ்டத்தில் உயர்ந்தது நல்ல கணவன் வாய்ப்பது, அடுத்தது நல்ல வேலைக்காரன் வாய்ப்பது. —செர்பியா

மனிதனுக்குச் சந்தோஷம் இரு தடவைகள் வரும்: ஒன்று மனைவியை அடையும் பொழுது, மற்றது அவளைப் புதைக்கும் பொழுது. —( ,, )

அடுப்படியிலேயே அடைகாக்கும் கணவன் விலாப்பக்கத்து வலி போன்றவன். —ஸ்பெயின்

உன் மனைவி உன்னை ஒரு கூரையிலிருந்து குதிக்கச் சொன்னால், 'கடவுளே, அது தணிந்த கூரையா யிருக்கட்டும்!' என்று பிரார்த்தனை செய்து கொள். —ஸ்பெயின்

மனிதன் தலை, பெண் தொப்பி. —சுவீடன்

பெண்டாட்டியை அடிப்பவன், அவளுக்கு மூன்று நாள் ஓய்வு கொடுத்து, தானும் மூன்று நாள் பட்டினியிருப்பான். —சுவிட்சர்லந்து

உலகம் மெச்சும் நல்லவனை அவன் மனைவி மட்டும் மோசமானவனாகக் கருதுவாள். —யூதர்

மனைவிக்குச் சீலைகள் வாங்கிக் கொடுத்தால், கணவனுக்கு அமைதி கிடைக்கும். —ஆப்பிரிக்கா

கணவர்களே, உங்கள் மனைவியரை நேசியுங்கள், அவர்களுக்கு எதிராகக் கொடுமையாக இருக்கவேண்டாம். —பு. ஏற்பாடு

நல்ல கணவனானால், மனைவியும் நல்லவளா யிருப்பாள். —இங்கிலாந்து

நல்ல மனைவியால் கணவனும் நல்லவனாவான். —( ,, )

செவிட்டுக் கணவன், குருட்டு மனைவி—இந்தத் தம்பதிகள் இன்பமா யிருப்பார்கள். —( ,, )

கணவர்கள் வானுலகம் சென்ற பிறகே மனைவியின் ஏச்சு நிற்கும். —( ,, )

கணவனுக்கு வேண்டியது அறிவு, மனைவிக்கு வேண்டியது அடக்கம். —( ,, )

கணவர்கள் அடங்கிப் போவதால்தான், மனைவியர் வெறி அதிகமாகின்றது. —( ,, )

புருடன் இறந்ததும், அண்டைவீட்டுக்காரர்கள் அவனுக்கு எத்தனை குழந்தைகள் என்பதை அறிகிறார்கள். —( ,, )

சக்கரவர்த்திகளும் தங்கள் மனைவியருக்கு வெறும் கணவர்களாகவே தோன்றுவர். —பைரன்

ஒரு மகனோடு இருப்பதைவிட, ஒற்றைக் கண்ணுடைய கணவனுடன் வாழ்வதே மேல். —ஸ்பெயின்

கணவனைத் தெரிந்துக்கொள்ள மனைவியின் முகத்தைப் பாருங்கள். -ஸ்பெயின்

கணவன் விதிக்கும் தளைகளால் தழும்பு உண்டாகாது. -ரஷ்யா

அன்பில்லாத கணவன் பொருமையுள்ள கணவனைவிட மேலானவன். -இதாலி

தன் குடும்பத்திற்கு நேரும் அவமானத்தைக் கடைசியாகத் தெரிந்து கொள்பவன் கணவன். -லத்தீன்

## மனைவி

இனிப்புக்குத் தேன், அன்புக்கு மனைவி. -இந்தியா

இல்லாள் இல்லாத வீட்டில் பேய்கள் குடியிருக்கும். -( ,, )

விவாகமான பெண்கள் அனைவரும் மனைவியர் ஆகமாட்டார் -ஜப்பான்

தீய மனைவி அறுபது வருடமாய்த் தீய்ந்து போகும் பயிருக்குச் சமானம். -( ,, )

இளம் மனைவி தன் வீட்டில் நிழலாகவும், எதிரொலியாகவுமே இருக்க வேண்டும். -( ,, )

மனைவியின் மூன்று அங்குல நீளமுள்ள நாக்கு ஆறு அடி உயரமுள்ள மனிதனைக் கொல்ல முடியும். -( ,, )

மனைவியரும் பாய்களும் வந்த புதிதில் சிறப்பாயிருப்பவை. -( ,, )

உன்னிடம் ஏழு பிள்ளைகள் பெற்றிருந்தாலும், அந்தப் பெண்ணை நம்ப வேண்டாம். -( ,, )

உன் தாயின் கண்கள் அவளைக் கவனிக்கும்வரை நீ ஒரு பெண்ணை நம்பலாம். -( ,, )

சேவலுக்கு வாழ்க்கைப் பட்டால், அதன் பின்னேதான் செல்ல வேண்டும். -சீனு

ஒற்றைத் திறவுகோல் கிலுகிலுக்காது. -( ,, )

ஒரே மனைவியிருந்தால், வீட்டில் சண்டைஇராது. -( ,, )

அழகில்லாத மனைவியரும், அறிவில்லாத வேலைக்காரிகளும் விலைமதிக்க முடியாத பொக்கிஷங்கள். —சீனா

மனைவியால் அவதிப்படுவோன்—அந்தோ பரிதாபம்!
—அரேபியா

மனிதன், தன்மனைவியைத் தவிர, மற்ற எதைப்பற்றிப் பேசினாலும், பொறுத்துக் கொண்டிருப்பான். —பாரசீகம்

ஊமையான மனைவி கணவனிடம் அடிபடுவதேயில்லை.
—ஃபிரான்ஸ்

தேனீயை மனைவியாக உடையவன் சந்தோஷமாக யிருப்பான். —ஜெர்மனி

[சுறுசுறுப்புள்ள மனைவியால் ஆக்கம் பெருகும்.]

ஃபிடிலைப் போல் பெண்ணை மீட்டிவிட்டு உயரே தூக்கி வைத்து விடமுடியாது. —( ,, )

குடியானவன் தன் மனைவியை அடிக்காவிட்டால், அவளுடைய ஈரல் அழுகிப் போகும். —போலந்து

வயோதிகனுக்கு வாய்த்த இளம் மனைவி அவன் நரகத்திற்கு ஏறிச் செல்லும் குதிரை. —( ,, )

மனைவியர் இளைஞருக்கு நாயகிகள், முதியோருக்குத் தாதிகள். —இங்கிலாந்து

உண்மையான வட்டுக்காரி அடிமையாகவும் இருப்பாள், வீட்டு அதிகாரியாகவும் இருப்பாள். —போஸ்னியா

ஒழுகும் கூரையும், புகையடையும் கூண்டும், ஓயாமல் சண்டையிடும் மனைவியும் ஒருவனை வீட்டை விட்டுக் கிளப்பிவிட முடியும். —வேல்ஸ்

ஒரு குற்றமுள்ள மனைவி வேண்டாமென்றால், இரு குற்றமுள்ளவள் வந்து சேருவாள். —( ,, )

என் முதல் மனைவி மனைவியா யிருந்தாள்; இரண்டாமவள் என் யசமானியா யிருந்தாள்; மூன்றாமவளை நான் சிலுவை போல் வைத்துக் கும்பிடுகிறேன்.
—பல்கேரியா

அடங்காப்பிடாரி ஒருத்தி இருந்தால் போதும்—சுற்றிலும் பத்து வீடுகளுக்குக் காவல் நாய் தேவையில்லை.
—ஸெக்

தாடி ஒரு மனிதனுக்குக் கௌரவம்; மனைவி அவன் கருவி.
-எஸ்டோனியா

குருட்டுக் கோழிக்கும் ஒரு தானியம் கிடைக்கின்றது, குடிகாரனுக்கும் ஒரு மனைவி கிடைக்கிறாள். -( ,, )

குதிரையையும் மனைவியையும் இலகானில்லாமல் உபயோகிக்க வேண்டாம். -( ,, )

உலகத்திற்கெல்லாம் தெரிய வேண்டிய விஷயத்தை உன் மனைவியிடம் சொன்னால் போதும். -( ,, )

கன்னியா யிருக்கும் பொழுது மாடப்புறுவா யிருந்தவள் மனைவியான பின் தண்டாயுதமாகி விட்டாள். -( ,, )

மனிதனுக்கு மனைவி வாய்த்தே தீருவாள். -( ,, )

கப்பல், குதிரை, அல்லது மனைவியை மற்றவரை நம்பி ஒப்படைக்காதே. -( ,, )

மனிதனின் பூட்டு மனைவி. -( ,, )

மனைவி ஒருமுழம் தள்ளி யிருந்தாலும், அந்த அளவுக்கு மனிதன் சுதந்திரமுள்ளவன். -( ,, )

மனிதன் வாழ்க்கையை மனைவியே பாழாக்குகிறாள். -( ,, )

எல்லாப் பெண்களும் நல்லவர்களா யிருக்கும் பொழுது, கெட்ட மனைவியர் எங்கிருந்து வருகின்றனர்? ( ,, )

அழகான பெண் கண்ணுக்குத்தான் சுவர்க்கம், ஆனால் பணப்பைக்குச் சனியன், ஆன்மாவுக்கு நரகம். -( ,, )

ஏழை மனைவிக்கு எத்தனையோ இன்னல்கள்: அழுகின்ற குழந்தைகள், ஈர விறகு, ஓட்டைப் பானை, கோபமுள்ள கணவன்.
-ஃபின்லந்து

என் கணவன் என்னை அடிப்பதில்லை, காரணம் அவனுக்கு என்மீது அன்பில்லை.
-கிரீஸ்

மனைவியர் நல்லவரா யிருந்தால், கடவுளும் ஒருத்தியை மணந்திருப்பார்.
-ஜியார்ஜியா

அழகான பெண்ணின் புன்னகை பணப்பையின் கண்ணீராகும்.
-லத்தீன்

மனைவியில்லாத கூடாரம் தந்தியில்லாத வீணை. -ருமேனியா

பெண்ணைவிட நாய் அறிவுள்ளது, அது தன் யசமானரைப் பார்த்துக் குரைப்பதில்லை. -ரஷ்யா

பெண்ணின் யாத்திரை சமையலறையிலிருந்து வாயிற்படி வரை. -( ,, )

மனைவிக்குக் கணவனே சட்டம். -( ,, )

சில சமயங்களில் அறிவுள்ள மனைவியின் சொல்லையும்கேட்டு நடக்கலாம். -செர்பியா

மனைவி இன்றியமையாத ஒரு தீமை. -( ,, )

உன் கணவனை ஒரு நண்பனைப் போல நேசி, ஆனால் பகைவனைப் போல எண்ணி அவனுக்கு அஞ்சி நட. -ஸ்பெயின்

ஒரு மனிதனின் அதிருஷ்டமோ துரதிருஷ்டமோ அவன் மனைவிதான். -( ,, )

பெண்டாட்டி யென்றால், புடவை, துணிமணிகள் என்று பொருள். -ஆப்பிரிகா

உன் மனைவியிடம் ஆலோசனை கேள், ஆனால் அவள் சொல்வதற்கு மாறாகச் செய். -( ,, )

பெண்ணுக்குப் பணிவது நரகத்திற்குப் பாதை. -( ,, )

உத்தமமான மனைவி கணவனுக்கு ஒரு கிரீடம். -ப. ஏற்பாடு

புதிதாகக் கலியாணமானவனே தன் மனைவியிடம் செய்திகள் கூறுவான். -இங்கிலாந்து

இங்கே புதைத்திருக்கிறது என் மனைவியை; அவள் இங்கேயே யிருக்கட்டும்! இப்போது அவளுக்கு ஓய்வு, எனக்கும் ஓய்வு. -டிரைடன்

பலர், தாம் சிக்கனமில்லாமல் வாழ்ந்து விட்டு, மனைவியைக் குறை சொல்லுவர். -இங்கிலாந்து

மிகவும் சாந்தமான கணவர்களுக்கும் புயல் போல் சீறும் மனைவியர் அமைகின்றனர். -( ,, )

அழகிய மனைவியை உடையவனுக்கு இரண்டு கண்களுக்கு மேல் தேவை. -( ,, )

அறைகள் காலியா யிருந்தால், மனைவியர்க்குத் தலை கிறு கிறுக்கும். —இங்கிலாந்து

மனிதன் எல்லா விஷ ஜந்துக்களுக்கும் மருந்து கண்டுபிடித்திருக்கிறான், ஆனால் தீய மனைவிக்கு மட்டும் இன்னும் மருந்து காணவில்லை. —ராபலே

கெட்ட மனைவியால் கணவனின் கப்பல் உடையும். —ஜெர்மனி

இறந்து போன மனைவியும், உயிருள்ள ஆடுகளும் ஒரு மனிதனைச் செல்வனாக்கும். —( ,, )

கெட்ட மனைவியை உடையவன் செல்வங்களின் நடுவில் வறுமையில் வாடுபவன். —( ,, )

உன் மனைவி குள்ளமா யிருந்தால், நீ குனிய வேண்டும். —யூதர்

மனைவி உறங்கும் பொழுது, (சாமான்) கூடையும் உறங்குகின்றது. —( ,, )

ஒரு மகள் வேண்டுமென்று தேர்ந்தெடுப்பதுபோல், மனைவியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். —இதாலி

இறந்த மனைவியின் துக்கம் வாயிற் கதவோடு சரி. —இதாலி

ஸீஸரின் மனைவி சந்தேகத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது. —லத்தீன்

(ரோமாபுரியில் ஆண்டு வந்த தலைவர்கள் ஸீஸர்கள், ஸீஸரின் மனைவி, எவரும் சந்தேகம் கொள்ள இடமில்லாமல், அப்பழுக்கற்றவளாக இருக்கவேண்டும்.)

பிறர் மனைவியரிடம் ஒருபோதும் சம்பந்தம் வைத்துக் கொள்ள வேண்டாம். —( ,, )

மனைவி உள்ள கட்டிலில் சண்டையில்லாமல் இராது. —( ,, )

விவாகமான மனிதன் ஒவ்வொருவனும் தன் மனைவி ஒருத்தி தான் உலகிலே நல்லவள் என்று எண்ணிக் கொள்ள வேண்டும். —ஸ்பெயின்

மனைவியைக் கௌரவிக்காதவன் தன்னையே குறைவு படுத்திக் கொள்கிறான். —ஸ்பெயின்

ஊமை மனைவி வாயால் ஏசமாட்டாள், கைகளை நெரித்து ஏசுவாள். -யூதர்

மனைவியைப் பற்றிக் குறை சொல்பவன் தன்னையே இழிவு செய்து கொள்கிறான். -ஸ்காட்லந்து

மனைவி விட்டுப் பிடித்தால்தான், ஒருவன் முன்னிலைக்கு வர முடியும். -( ,, )

வெள்ளாட்டின் வெண்ணையும், பெண்டாட்டி சொத்தும் வீட்டுக்கு வேண்டாம். -ஃபின்லந்து

## கற்பு

சோதனைக்கு உள்ளாகாத பெண் தன் கற்பைப் பற்றிப் பெருமை பேச முடியாது. —மான்டெயின்

கற்பை இழக்கத் துணிந்தவள் எதையும் இழக்கத் துணிவாள். -டாஸிடஸ்

ஒரு முறை இழந்த கற்பை ஒட்ட வைக்க முடியாது. —இங்கிலாந்து

மிகவும் எச்சரிக்கையோடு நடப்பவர்கள் கற்பில் உயர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். —ஸ்பெயின்

## வீடு

ஒவ்வொரு வீடும் ஓர் உலகம். —ஸ்பெயின்

சின்ன வீடானாலும், சொந்த வீடு வேண்டும். —லிதுவேனியா

நாயில்லாத வீடு குருடு, சேவலில்லாத வீடு ஊமை. -( ,, )

உயரே ஏறிப் பார்: எல்லா வீடுகளும் ஒரே மாதிரியாகவே தோன்றுகின்றன. - இந்தியா

யானை அசைந்து கொண்டே தின்னும், வீடு நின்று கொண்டே தின்னும். —தமிழ்நாடு

தொலைவிலே தங்க மழை பெய்தாலும், வீட்டைச் சுற்றி ஆலங்கட்டியே மழையாகப் பெய்தாலும், வீடுதான் சிறந்தது. —மலாய்

ஏழுமுறை இருக்கையை மாற்றுவோன் ஆண்டியாவான். —( ,, )

கட்டடம் கட்டுதல் இனிமையாக எளிமையடையும் வழி. —இங்கிலாந்து

வீட்டைக் கட்டிப் பாராதவன் மண்ணிலிருந்து சுவர்கள் முளைத்திருப்பதாக எண்ணுவான். —எஸ்டோனியா

வீடு இல்லாளின் உலகம், உலகம் மனிதனின் வீடு. —( ,, )

நிலைப் படியிலே அமர்ந்திருப்பவன் எல்லோருக்கும் தடையாயிருப்பான். —நார்வே

வீட்டுக்குக் கேடு வருவது பின்கதவினால்தான். —ரஷ்யா

நம் வீடு இறைவனுடையது. —செர்பியா

வீட்டைவிட்டு ஓடுபவன் வீட்டுக்கே திரும்பி வருவான். —ஸ்பெயின்

ஒரு வீட்டை வாங்குமுன், அக்கம் பக்கத்தில் வசிப்பவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். —யூதர்

ஒவ்வொரு விலங்கும் தன் குகையில் உறுமும். —ஆப்பிரிகா

வீட்டைப் பெருக்குவோன் துடைப்பத்தின்மீது அமரக் கூடாது. —( ,, )

தன் வீட்டுக்குத் திரும்பிவரும் மனிதன் தீய சகுனங்களைப் பொருட்படுத்த மாட்டான். —( ,, )

பாழடைந்த வீட்டிலெல்லாம் ஒரு பேய் இருக்கும். —எகிப்து

வீடு அன்பு நிறைந்த இடம். —ஆப்பிரிகா

பாதி வீட்டில் குடியிருந்தால் பாதி நரகம். —ஜெர்மனி

பழைய வீடுகளில் எலிகள் அதிகம், பழைய துணிகளில் பேன்கள் அதிகம். —( ,, )

ஒரே கழியைக் கொண்டு எப்படி வீடு கட்ட முடியும்? -சீன

கட்டிய வீடு கிடைக்கும், ஆனல் மனேவியை நாம்தான் கட்டிக் கொள்ள வேண்டும். -இங்கிலாந்து

மனிதனுக்குத் தன் வீடுதான் மாளிகை. -( ,, )

முறையில்லாத வாடகைக்காரனேவிட, காலி வீடே மேலானது. -( ,, )

சத்திரத்தின் பக்கத்திலும், முக்குமுனேயிலும் உள்ள வீட்டைத் தேர்ந்தெடுக்க வேண்டாம். -( ,, )

வீட்டைப் பார்க்கிலும் கதவு பெரிதா யிருக்கக் கூடாது. -( ,, )

வீட்டைப் பார்த்தே உடையவனே அறிந்து கொள்ளலாம். -( ,, )

வாழ்க்கையின் இன்பத்திற்குப் பலவகை இன்பங்கள் தேவை; ஆதலால் அடிக்கடி உன் வீட்டை மாற்றிக் கொள்ளவும். -அரேபியா

வெளியே விளக்கு வேண்டும், வீட்டிலே அனல் வேண்டும். -ஆர்மீனியா

[விளக்கு—வழி காண்பதற்காக; அனல்—குளிர் காய்வதற்காக.]

வெறும் கையோடு வீடு திரும்பினல், உன்னே வீட்டுக்கு உடையவனுக எண்ணிக் கொள்ள வேண்டாம். -பல்கேரியா

[வீட்டில் அனேவரும் அலட்சியமாக எண்ணுவர்.]

வீடில்லாத மனிதன் கூடில்லாத பறவை. -ஃபிரான்ஸ்

இதயம் எங்கே தங்கியுள்ளதோ அதுவே வீடு. -லத்தீன்

என் வீட்டில் நானே அரசன். -ஸ்பெயின்

தன் வீட்டில் அமைதி கிடைக்காதவன் பூலோக நரகில் இருக்கிருன். -துருக்கி

# அண்டை வீட்டுக்காரர்

அண்டை வீட்டுக்காரரை நேசி, ஆனால் குறுக்குச் சுவரை இடித்துவிடாதே. —இந்தியா

உன் தலைக்குச் சேராத தொப்பியை அடுத்த வீட்டுக்காரர் தலையில் கட்டாதே. —( ,, )

அண்டை அயலார் அனுமதித்தால்தான், நீ அமைதியோடு வாழலாம். —( ,, )

அம்மா சொல்வது போல் உண்மை இராது, அயலார் சொல்வதே உண்மை. —( ,, )

பக்கத்து வீட்டுக்காரன் உன் பந்துவைவிட நெருங்கினவன். —அல்பேனியா

துருக்கியரைப் பற்றியும், போப்பாண்டவரைப் பற்றியும் பேச்சு வருகிறது; ஆனால் எனக்குத் தொந்தரவு கொடுப்பவன் என் அண்டை வீட்டுக்காரன். —இங்கிலாந்து

உன் அண்டை வீட்டுக்காரன் நல்லவனு யிருந்தால், உன் வீடு கூடுதலாக நூறு பவுன் பெறும். —ஸெக்

அண்டை அயலான் தயவில்லாமல் எவனும் வாழ முடியாது. —டென்மார்க்

மூன்று பேர்களின் பக்கத்தில் குடியிருக்க வேண்டாம்: பெரிய நதிகள், பெரிய பிரபுக்கள், பெரிய சாலைகள். —( ,, )

நரிகளைவிட அதிகமாக நம் அக்கம் பக்கத்திலுள்ளவர்களே நம்மைக் கவனிப்பார்கள். —கிரீஸ்

நல்லவர்களின் நடுவில் வசித்தல் வெகுதூரத்தில் புகழப்படுவதைவிட மேலாகும். —நார்வே

அண்டை வீட்டை விலைக்கு வாங்குவதைப் பார்க்கினும், அண்டை வீட்டானையே விலைக்கு வாங்கு. —ரஷ்யா

மனிதன் நண்பர்களில்லாமல் இருக்க முடியும், ஆனால் அக்கம் பக்கத்து வீட்டார்கள் இல்லாமல் முடியாது. —( ,, )

அண்டை வீட்டுக்காரருக்கு நஷ்டமில்லாமல் நாம் அடையும் இலாபமே இலாபம். —ஜெர்மனி

பக்கத்து வீட்டுக்காரரே நாம் முகம் பார்த்துக் கொள்ளும் கண்ணுடி. —இங்கிலாந்து

நண்பர்கள் இல்லாமல் நாம் வாழலாம், அண்டை அயலார் இல்லாமல் வாழ முடியாது. —( ,, )

## இல்வாழ்க்கை

பழைய வீட்டைச் சீர்ப்படுத்து, பழைய மனைவியைப் போற்று. —இந்தியா

வீட்டுக் குப்பையை வீட்டிலேயே அள. —( ,, )

ஏழு திரைகளைத் தாண்டியும் வேலைக்காரியின் குறையைக் கண்டு விடுவாய்; யசமானி அம்மாளின் குறை ஒரே திரையில் மறைந்து விடும். —( ,, )

கட்டிலிலே கணவனும் மனைவியும், வெளியிலே அவர்கள் விருந்தினர்கள். —சீனு

கணவன் மனைவி சண்டை ஓர் இரவோடு சரி. —( ,, )

இல்வாழ்வு முற்றுகைக்கு உட்பட்ட கோட்டை போன்றது; வெளியே யிருப்பவர்கள் உள்ளே செல்ல விரும்புகின்றனர், உள்ளே யிருப்பவர்கள் வெளியேற விரும்புகின்றனர். —அரேபியா

ஒரே வீட்டில் இரண்டு சக்களத்திகள் இருப்பதைவிட இரண்டு பெண் புலிகள் இருப்பது நலம். —பாரசீகம்

கணவன் கரண்டியால் சேகரித்து வருவதை, நீ மண்வெட்டியால் வெளியே வாரி வாரி இறைக்க வேண்டாம். —இங்கிலாந்து

பெண் இல்லை யென்ருல், வீடில்லை. —பல்கேரியா

நீ வெளியில் எங்கே சுற்றினுலும், இன்பமயமான உன் வீட்டுக்கு வந்துவிடு. —( ,, )

உன் வீடு—உனது ராஜ்யம். —( ,, )

அழகான மனைவியும் அருமையான பழைய மதுவும் இருந்தால், நண்பர்கள் பலர் வருவார்கள். —பல்கேரியா

பெண் இல்லாத வீடு வாளியில்லாத கிணறு. —( ,, )

திருமணப் பெண்ணுக்கு இசையும் அழகும்; விவாகமான பின் பசியும் தாகமும். —எஸ்டோனியா

தொடக்கத்தில் இருவரும் ஒரே சட்டைக்குள் ஒண்டியிருக்க முடிந்தது; பின்னால் அவர்கள் ஒரே குடிசையில் சேர்ந்திருக்க முடியவில்லை. —( ,, )

வீட்டுக்குத் தேவையானவை நான்கு: தானியம், சேவல், பூனை, மனைவி. —இதாலி

கணவன் குடித்தால் பாதி வீடு எரியும், மனைவியும் குடித்தால் முழு வீடும் எரியும். —ரஷ்யா

தன் வீட்டுக்கு வெளியிலே இன்பத்தை நாடுவோன் தனது நிழலையே துரத்திக் கொண்டு திரிகிறான். —( ,, )

உன் சொந்த வீட்டில் சுவர்கள் கூட உனக்கு உதவியாயிருக்கும். —( ,, )

என்னை என் குடும்பத்திலிருந்து காப்பாற்றுங்கள்; என் எதிரிகளை நானே பார்த்துக் கொள்கிறேன். —செர்பியா

தரையை வைத்து வீடு கட்டப் பெறுவதில்லை, ஒரு பெண்ணை வைத்தே கட்டப் பெறுகின்றது. —( ,, )

வீட்டில் கடிகாரமே யசமானராயிருக்கவேண்டும். —சுவீடன்

வீட்டுத் தலைவன்மீதுதான் வீட்டிலுள்ள எல்லோருடைய குப்பைகளும் கொட்டப்படும். —ஆப்பிரிகா

பெண்தான் இல்லம். —( ,, )

பெண் பிள்ளை இரண்டு வார்த்தைகள் சொன்னால், ஒன்றை எடுத்துக் கொண்டு, மற்றதை விட்டுவிடு. —( ,, )

சந்தோஷமான குடும்பங்கள் எல்லாம் ஒரே மாதிரியாக இருக்கின்றன; துக்ககரமான குடும்பம் ஒவ்வொன்றும் வெவ்வேறு மாதிரியாக இருக்கின்றது. —டால்ஸ்டாய்

கடவுள் நமக்கு உறவினரைக் கொடுத்திருக்கிறார்; ஆனால் அன்பர்களை மட்டும் நாமே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். —இங்கிலாந்து

அவசியமான பொருள்கள் நிறைந்த ஒரு வீடு, நன்றாக உழுத ஒரு சிறு நிலம், நல்ல சிந்தனையுள்ள சிறு மனைவி—மூன்றுமே இன்ப வாழ்வளிக்கும். —( ,, )

வெளியே கிடைக்கும் வெந்த இறைச்சியைக் காட்டினும், வீட்டிலே யிருக்கும் உலர்ந்த ரொட்டி மேல். ( ,, )

வீட்டில் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்பதே எல்லா ஆசைகளின் முடிவான நோக்கம். —( ,,

நான் என் தொப்பியை மாட்டும் இடமே என் வீடு. ( ,, )

இதயம் எங்கு தங்கியுளதோ அதுவே வீடு. —( ,, )

தன் குடும்பத்தை விட்டு ஓடுபவனுக்கு முடிவான இடம் இல்லை. —லத்தீன்

நம் சொந்த வீடே மற்ற வீடுகளைவிட மேலானது. —( ,, )

என் வீட்டுக்கு நானே ராஜா. —ஸ்பெயின்

தன் வீட்டில் அமைதி யில்லாதவன் பூலோக நரகில் இருக்கிறான். —துருக்கி

வீடில்லாத மனிதன் கூடில்லாத பறவை. —ஃபிரான்ஸ்

சேவல் தன் குப்பை மேட்டிலிருந்தே கூவும். —( ,, )

வீட்டை விட்டு வெகு தூரத்திலிருப்பவன் அபாயத்திற்கு அருகிலிருக்கிறான். —ஹாலந்து

## குழந்தைகள்

தகப்பனாவதில் சிரமம் ஒன்றுமில்லை. —துருக்கி

மூன்று பெண்களுக்கு அப்பால் பிறந்த பையன் பிச்சையெடுப்பான்; மூன்று பையன்களுக்கு அப்பால் பிறந்த பெண் இராஜ்யத்தை ஆள்வாள். —இந்தியா

உன் மகன் நல்லவனானால், நீ ஏன் சேமிக்க வேண்டும்? உன் மகன் தீயவனானால், (அவனுக்காக) நீ ஏன் சேமித்து வைக்க வேண்டும்? —( ,, )

இருண்ட வீட்டின் ஒளி—மகன். —( ,, )

குழந்தையின் ஓட்டம் தாய்வரைக்கும். —( ,, )

பதினாறு வயதுவரை மகன், அதற்கு மேல் தோழன். —( ,, )

குழந்தைகள் இல்லாத வீடு சுடுகாடு. —( ,, )

பிரியமுள்ள தந்தையரும் தாயருமே உண்டு, பிரியமுள்ள பிள்ளைகளும் பெண்களும் இல்லை. —சீனா

பெண் பிறக்கும் பொழுது வெளியே பார்த்துக்கொண்டு வருகிறாள், பையன் பிறக்கும் பொழுது உள்ளே பார்த்துக் கொண்டு வருகிறான். —( ,, )

வானத்திற்கு மணி சூரியன், வீட்டுக்கு மணி குழந்தை. —( ,, )

குழந்தையில்லாத செல்வன் சீமானல்லன்; செல்வமில்லாது குழந்தைகளை மட்டும் பெற்றவன் ஏழையுமல்லன். —( ,, )

உங்கள் குழந்தைகளுக்கு அமைதியான வாழ்க்கை வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், அவர்களுக்கு எப்பொழுதும் கொஞ்சம் பசியும் குளிரும் இருக்கும்படி செய்யுங்கள். —( ,, )

விளையும் பயிர் முளையில் தெரியும். —தமிழ்நாடு

ஆணை அடித்து வளர்க்க, பெண்ணைத் தட்டி வளர்க்க. —( ,, )

ஐந்துக்கு மேலே அரசனும் ஆண்டி. -தமிழ்நாடு

[ஐந்து பெண்களுக்கு மேல் பிறந்து விட்டால், பெற்றோரின் செல்வம் காலியாகும்.]

உன் பையனிடம் உனக்கு அன்பிருந்தால், அவனை அடித்து வளர்க்கவும்; வெறுப்பிருந்தால், தின்பண்டங்களை வாங்கி (அவன் வாயில்) திணிக்கவும். -சீனு

ஐந்து பெண் குழந்தைகளுள்ள குடும்பத்திற்குத் திருடன் வேறு தேவையில்லை. -( ,, )

[குடும்பத்தின் சொத்து விரைவிலே தீர்ந்து விடும்.]

கெட்டிக்காரச் சேவல் முட்டைக்குள்ளிருந்தே கூவும். -( ,, )

பெண் பிறந்தால், வீட்டுக் கதவு நிலை நாற்பது நாள் அழும். -அரேபியா

என் இதயம் என் மகனை நோக்கிச் செல்கின்றது, அவனுடைய இதயமோ ஒரு கல்லை நோக்கிச் செல்கின்றது. -( ,, )

மகள் இருந்தால், தாய்க்குச் செலவு இருந்து கொண்டேயிருக்கும். -ஆர்மீனியா

உன் பிள்ளைகளையும் பெண்களையும் நம்பியிருந்தால், உனக்கு இரு கண்ணும் இல்லை. -பாமா

[நம்பியிருத்தல் வீண்.]

தானுகத் தடுக்கி விழுந்த குழந்தை அழுவதில்லை. -கால்மிக்

குழந்தைகள் நிறைந்த வீட்டில் சயித்தான் ஆள்வதில்லை. -குர்திஸ்தானம்

வீடு என்ருல், மூன்று குழந்தைகளாவது இருக்கவேண்டும். -( ,, )

இளமையிலே குழந்தைகள் நம் கைகளுக்கு வலியளிக்கும், முதுமையிலே மனத்திற்கு வேதனையளிக்கும்.
—ஐரோப்பிய நாடோடிகள்

வைசூரி விளையாடிய பிறகுதான், பெற்றோர்கள் குழந்தையைத் தங்கள் குழந்தையாகக் கணக்கிட வேண்டும்.
—ஆப்கானிஸ்தானம்

நன்றியற்ற மகன் தந்தையின் முகத்திலுள்ள பரு; அதை அப்படியே விட்டிருந்தால் விகாரம், கிள்ளியெறிந்தால் வலி.
—( ,, )

தந்தை அழ நேருவதைவிட, குழந்தை அழுதால் அழட்டும்.
—ஜெர்மனி

குழந்தைகளில்லாமல் வாழ்பவன் தொந்தரவுகளை அறியான், குழந்தைகளில்லாமல் மரிப்பவன் மகிழ்ச்சியை அறியான்.
—( ,, )

தாய் தன் குழந்தையைத் தழுவினால், அநாதைக் குழந்தையை ஆண்டவர் தழுவிக் கொள்கிறார்.
—போலந்து

குடியானவனுடைய குழந்தைகள் அவன் செல்வங்கள்; கனவானுடைய குழந்தைகள் அவன் கடன்கள்; பிரபுவின் குழந்தைகள் திருடர்கள்.
—( ,, )

[முற்காலத்தில் பிரபுக்கள் குடியானவர்களைத் துன்புறுத்தி, நில புலன்களைத் தாங்களே கைப்பற்றி வந்ததால், இப்பழமொழி அவர்களுக்கு எதிராக எழுந்த துவேஷத்தைக் காட்டுகின்றது.]

அதிகக் குழந்தைகள் இருந்தால், வீட்டுக் கூரை பிய்ந்து போய்விடாது.
—பெல்ஜியம்

ஒரு குழந்தையுடன் நீ நடக்கலாம்; இரு குழந்தைகளுடன் சவாரி செய்யலாம்; மூன்றாகிவிட்டால், நீ வீட்டோடு இருக்க வேண்டியதுதான்.
—இங்கிலாந்து

வளர்ப்பதற்குச் சொந்தக் குழந்தையில்லாதவன் அதிருஷ்டமில்லாதவன்.
—அயர்லந்து

குழந்தையில்லாதவன் சும்மா குந்தியிருப்பது வீண்.
-அயர்லந்து

சண்டையிட இருவர், சமாதானத்திற்கு ஒருவர்.
-ஸ்காட்லந்து

[குடும்பத்திற்கு மூன்று குழந்தைகள் போதும்.]

கிழவர்களும் குழந்தைகளும் இல்லாத வீட்டில் வேடிக்கையும் கலகலப்பும் இருக்கமாட்டா. -( ,, )

குழந்தை தன்னைத் தூக்கிவைத்துக் கொஞ்சுகிறவரை அறியும்; தன்னிடம் உண்மையான அன்பு செலுத்துவோரை அறியாது. -வேல்ஸ்

குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்.
-தமிழ் நாடு

உன் குழந்தைகள் தீயோராயிருந்தால், நீ அவர்களுக்குச் சொத்து வைக்க வேண்டாம்; அவர்கள் நல்லோராயிருந்தால், உன் சொத்து அவர்களுக்குத் தேவையில்லை. -பல்கேரியா

குழந்தையின் வயிற்றுக்குக் கண் இல்லை. -டென்மார்க்

அருமையான குழந்தைக்குப் பிரம்பு தேவை.
-எஸ்டோனியா

பயமில்லாமல் வளரும் குழந்தை பெருமையில்லாமல் மரிக்கும். -( ,, )

வசந்த காலம் வந்து குழந்தையை முத்தமிடுகிறது, மாரிக் காலம் வந்து அதை வதைக்கிறது. -( ,, )

குழந்தையின் அருமை அடுத்த குழந்தை வரும்வரை.
-( ,, )

குழந்தையின் ரொட்டியில் மணல் கலந்திருக்கும். -( ,, )

பெண் குழந்தை வீட்டிலிருப்பதைக் கொண்டு செல்லும், ஆண் குழந்தை (வெளியிலிருந்து) கொண்டுவரும்.
-( ,, )

மகள் உன் முட்டளவு வளர்ந்து விட்டால், அவளுடைய சீதனப்பெட்டி அவள் மார்பளவு உயரம் இருக்க வேண்டும். -எஸ்டோனியா

பெண் குழந்தைகள் வீட்டுக்கு அலங்காரம், அவர்கள் விற்பனைக்குரிய பொருள்கள். —எஸ்டோனியா

குழந்தையும் உதவிதான் செய்கிறது, ஒரு மீனைக் கழுவுவதற்குள், இரண்டு மீன்களைத் தின்னுகின்றது. —பின்லந்து

மூடன் தன் குதிரையைப் புகழ்வான், பயித்தியக்காரன் தன் மருமகளைப் புகழ்வான், அறியாதவன் தன் மகளைப் புகழ்வான். —( ,, )

ஒற்றைக் குழந்தை கடவுளின் தண்டனை. —ஹங்கேரி

ஆந்தையும் தன் மகனை இராஜாளி என்றே கருதுகின்றது. —( ,, )

தூங்கும் பொழுது சிரிக்கும் குழந்தை தேவர்களுடன் விளையாடுகின்றது. —இத்தாலி

குழந்தைகள் இல்லாதவனுக்கு அன்பு புரியாது. —( ,, )

அதிருஷ்டமுள்ளவர்கள் மணமாகி மூன்றாம் மாதம் குழந்தையை அடைகிறார்கள். —லத்வியா

அதிருஷ்டமுள்ளவனுக்கு முதற் குழந்தை பெண்ணாயிருக்கும். —போர்த்துகல்

மகளின் குழந்தைகள் தன் குழந்தைகளைவிட அருமையானவை. 344445 —ருஷ்யா

நீ தகப்பனாகாமலே வாழ்ந்தால், நீ மனிதனாக இல்லாமலே மரிப்பாய். —( ,, )

பெண்பிள்ளை கலியாணப் பருவமடையும் பொழுதுதான் பிறந்தவளாகிறாள். —( ,, )

குழந்தைகளை இதயத்தால் நேசிக்கவும்; ஆனால் கைகளால் பயிற்சி அளிக்கவும். —ருஷ்யா

விவாகமான பெண் குழந்தை பக்கத்து வீட்டுக்காரரைப் போலத்தான். —( ,, )

குழந்தையின் கையும் பன்றித் தொட்டியும் நிறைந்தேயிருக்க வேண்டும். —சுவிட்சர்லந்து

உலகிலே ஒரு குழந்தையை விட்டுச் செல்பவன் நித்திய மாக வாழ்கிருன். —ஆப்பிரிகா

முதற் குழந்தை தந்தைக்குத் தோழன். —( ,, )

குழந்தைகள் தெய்வத்தோடு பேசுகின்றன. —( ,,

கேள்விகள் கேட்கும் குழந்தை மூடக் குழந்தையன்று. —( ,, )

பெரிய நகருக்குச் சென்றிராத குழந்தை தன் தாய்தான் தலை சிறந்த சமையற்காரி என்று சொல்லும். —( ,, )

முதலாவது செல்வம் குழந்தைகள், இரண்டாவது தான் பணம். —( ,, )

குழந்தை, ஒட்டகக்கழுத்து மாதிரி, எங்கு வேண்டு மானுலும் நுழையும். —( ,, )

குழந்தைகளில்லாத எலி ஆற்றோரம் வீடுகட்டிக்கொள்ளும். —( ,, )

மனிதக் குஞ்சுகள் பறக்க நாளாகும். —( ,, )

குழந்தைகளே ஏழைகளின் செல்வங்கள். —இங்கிலாந்து

குழந்தைகளுக்குச் செவிகள் அகலமானவை, நாவுகள் நீள மானவை. —( ,, )

புருக்கள் கடலைகளைக் கொத்துவது போல், குழந்தைகள் வார்த்தைகளைக் கொத்தி யெடுத்துக் கொள்ளும்.

குழந்தைகள் இளமையில் தாயிடம் பால் குடிக்கின்றன, முதுமையில் தந்தையிடம் (அறிவுப்) பால் குடிக் கின்றன. —இங்கிலாந்து

குழந்தை யில்லாதவனுக்கு அன்பு என்ன என்று தெரியாது. —( ,, )

குழந்தையைக் கொண்டாடினுல், தாயின் அன்பைப் பெறலாம். —( ,, )

இரண்டு தொட்டில்களை ஆட்டுவதைவிட, ஒரு கலப்பை யால் உழுவது மேல். —( ,, )

குழந்தைக்கு முதற்பாடம் பணிவு. —( ,, )

தீப்பட்ட குழந்தை நெருப்புக்கு அஞ்சும். —இங்கிலாந்து

நாவை அடக்கப் பழக்கிய குழந்தை விரைவிலே பேசக் கற்றுக் கொள்ளும். —( ,, )

குழந்தை பேசுவதெல்லாம் அடுப்பங்கரையில் கற்றவை. —( ,, )

தந்தை அழுவதைவிட, குழந்தை அழுவது மேல். —( ,, )

குழந்தைகளும் கோழிக் குஞ்சுகளும் எப்பொழுதும் தின்று கொண்டே யிருக்கவேண்டும். —( ,, )

பகுத்தறிவு உறங்கும் காலம் குழந்தைப் பருவம். —ரூஸோ

செல்லக் குழந்தைக்குப் பல பெயர்கள் இருக்கும். —டென்மார்க்

குழந்தைகளும் குடிகாரர்களும் உண்மையே பேசுவர். —( ,, )

அடுத்த வீட்டுக்காரர் குழந்தைகளே எப்பொழுதும் மோசமான குழந்தைகள். —ஜெர்மனி

பெற்ருேர்கள் நூற்பதைக் குழந்தைகள் கழியில் சுற்ற வேண்டும். —( ,, )

குழந்தைகளோடு சேர்ந்து விளையாடிஞல், அவர்களை எப்படியும் திருப்பலாம். —ஜெர்மனி

குழந்தை அழாவிட்டால், தாய்க்கு ஒன்றும் புரிவதில்லை. —ரஷ்யா

குழந்தையை அடித்து வளர்க்காதவன், பின்னல் தன் மார்பிலே அடித்துக் கொள்ள நேரும். —துருக்கி

## தாய் தந்தையர்

அன்னையின் அன்புக்கு வயதே கிடையாது. —ஜெர்மனி

கோழி மிதித்தால், குஞ்சுக்குச் சேதமில்லை. —தமிழ்நாடு

தாய்வார்த்தை கேளாப் பிள்ளை நாய்வாய்ச் சீலை. —( ,, )

பசு உள்ள இடத்தில் கன்றும் இருக்கும். —இந்தியா

செல்வமுள்ள போது தந்தை, வறுமையிலே தாய். —( ,, )

தாய்க்கு உதவி செய்யாதவன் வேறு யாருக்கு உதவி செய்வான்? —இந்தியா

புத்திசாலியான மகன் தந்தைக்கு மகிழ்ச்சி யளிப்பான். —ப. ஏற்பாடு

தந்தையின் கோபத்தைக் கண்டு மகன் அஞ்சுவதில்லை அவனுடைய மௌனத்திற்கே அஞ்சுகிறான். —சீனு

மகனைப் புகழும் தந்தை தன்னையே புகழ்ந்து கொள்கிறான் —( ,, )

ஒரு தந்தை பத்துக் குழந்தைகளைப் பேணி வளர்க்கலாம், பத்துக் குழந்தைகள் ஒரு தந்தையைப் பேணுவது அரிது. —( ,, )

ஒரு தந்தை நூறு ஆசிரியர்களுக்கு மேலாவார். —இங்கிலாந்து

தந்தை தோட்டத்திற்குப் போனால், மகன் உழுவதற்குப் போவான். —( ,, )

குழந்தைகளின் குற்றங்களை வெறுக்கும் தந்தையே அவர்களை நேசிப்பவன். —ஃபிரான்ஸ்

தந்தையின் வாழ்த்து நீருள் அழியாது, நெருப்பிலும் அழியாது. —ரஷ்யா

குதிரைகளும் மனிதர்களும் தாய்வழியைக் கொள்வார்கள் —இந்தியா

அன்னை அவன் வயிற்றைப் பார்ப்பாள், மனைவி முதுகைப் பார்ப்பாள். —( ,, )

பசுவின் பின்னால் எப்பொழுதும் ஒரு கன்று இருந்து வரும் சில சமயங்களில் அது சொந்தக் கன்று யிருக்கும் சில சமயங்களில் வேறு பசுவின் கன்று யிருக்கும். —கீழை நாடுகள்

தாயும் தந்தையும் செல்லாத பாதையில் நீ செல்ல வேண்டாம். —ஆப்பிரிகா

குழந்தைகளின் இதயத்திலும் வாயிலும் வரும் கடவுளின் பெயர் தாய். —தாக்கரே

தாய் எப்படி வளர்க்கிருளோ, அப்படி உருவாகிருர்கள் மனிதர்கள். —இங்கிலாந்து

தாயாரின் செல்லப் பிள்ளைகள் வெண்ணை வெட்டும் வீரர்களாகவே வருவார்கள். —( ,, )

குழந்தையைப் பெற்றவளெல்லாம் தாயாகிவிட மாட்டாள். —( ,, )

தாயில்லாத வீடு வீடாகுமா? —( ,, )

நடனத்தின் இசை நடுவிலும், தாய்க்குத் தன் குழந்தைகளின் அழுகுரலே கேட்கும். —ஜெர்மனி

தாய்ப் பாலுடன் பருகியது சாகும்வரை உடலில் இருக்கும். —ஸ்பெயின்

தாயிலே கெட்டவளுமில்லை, சாவிலே நல்லதுமில்லை. —புத்தர்

உங்களுடைய தந்தையையும் தாயையும் கௌரவியுங்கள். —ப. ஏற்பாடு

என் மகனே, உன் தந்தையின் போதனையைக் கேட்டுக்கொள், உன் தாயின் சட்டத்தையும் புறக்கணிக்க வேண்டாம். —( ,, )

எந்தத் தாயரும் தந்தையரும் தங்கள் குழந்தைகளை விகாரமானவர்களாகக் கருதுவதில்லை. —ஸ்பெயின்

புத்திசாலியான மகனால் தந்தை மகிழ்ச்சியடைகிருன். ஆனல் மூட மகனால் தாயின் உள்ளம் வருந்துகின்றது. ப. ஏற்பாடு

தந்தையின் கடன்களை மகன் செலுத்துகிருன். —சீனு

தந்தையைக் குறை சொல்லும் பொழுது, மகன் தானே சிறுமையடைகிருன். —( ,, )

நல்ல கருவிலும் தீய பிள்ளைகள் உண்டாகியிருக்கிருர்கள். —ஷேக்ஸ்பியர்

ஒருவனுக்குக் கடவுள் சொந்தப் பிள்ளைகளைக் கொடுக்காவிட்டால், சயித்தான் அவனுக்கு அவனுடைய சகோதரர் பிள்ளைகளைக் கொடுக்கிருன். —ஸ்பெயின்

கலியாணம் செய்து கொள்ளும் மகன் தாயை விட்டுத் தாரத்தைப் பிடித்துக் கொள்கிறன். -யூதர்

தாய் உன்னைப் பல மாதங்கள் சுமந்து கொண்டிருந்தாள், மூன்று ஆண்டுகள் பால்கொடுத்து வளர்த்தாள், பள்ளிக்கு உனக்குச் சோறு சுமந்து கொண்டு வந்தாள்...அவள் உன்னைப் பற்றி ஆண்டவனிடம் முறையிடும்படி வைத்துக்கொள்ளாதே. -எகிப்து

தந்தையின் ஆசியால் வீடு உண்டாகும்; தாயின் சாபத்தால் வீடு சாய்ந்து விடும். -ஸ்காட்லந்து

தந்தைதான் வீட்டுக்கு விருந்தாளி. -பல்கேரியா

தந்தையின் அன்பு கல்லறை வரை; தாயின் அன்பு உலகுள்ள வரை. -எஸ்டோனியா

தாய்ப்பாலோடு பருகியதெல்லாம் ஆன்மா பிரிந்து செல்லும் போதுதான் அதனுடன் வெளியே செல்லும். -ரஷ்யா

குழந்தையின் விரலில் வலியிருந்தால், தாயின் இதயத்தில் வலியுண்டாகும். -( ,, )

கடவுள் உயரே யிருக்கிறர், பூமியில் தந்தை யிருக்கிறர். -( ,, )

(ஒரு தந்தை) ஒரு மகனை விட்டு ஒரு மகனிடம் போய் யாசிப்பதைவிட, வீடு வீடாக யாசித்தல் மேல். -( ,, )

நல்ல மாற்றுந்தாய்க்குச் சுவர்க்கத்தில் தங்க நாற்காலி காத்திருக்கிறது. -யூதர்

[அப்படி ஒருத்தி கிடைக்க மாட்டாள்.]

முட்டை கோழிக்கு அடைகாக்கச் சொல்லிக் கொடுக்கிறது! -ஆப்பிரிகா

அன்புக்கு உற்பத்திஸ்தானம் அன்னை. -( ,, )

அன்னையை எவரோடும் ஒப்பிடக்கூடாது.—அவள் ஈடற்றவள். -( ,, )

குழந்தை தாய்க்கு நங்கூரம்; அவள் இருக்கிற இடத்தை விட்டு அசைய முடியாது. -அமெரிக்கா

## குலம்

ஒவ்வொரு பிச்சைக்காரனும் எவனோ ஓர் அரசனின் வழி வந்தவன், ஒவ்வோர் அரசனும் ஒரு பிச்சைக்காரனின் வழிவந்தவன். —இங்கிலாந்து

குலப் பெருமை பேசுபவன் உருளைக் கிழங்கு போன்றவன்; கிழங்கைப் போலவே, அவன் பெருமையும் மண்ணுக்குள் மறைந்திருக்கும். -( ,, )

தாய் வெங்காயம், தந்தை உள்ளிப்பூடு, அவன் மட்டும் ரோஜா அத்தர்! —துருக்கி

ஆயன் மகன் ஆயன். -ரஷ்யா

## இனம்

வெளவால் தன் விருந்தாளியிடம், 'நான் தொங்குகிறேன், நீயும் தொங்கு!' என்று சொல்லும். -இந்தியா

பாம்பைவிடப் பிராமணனை நம்பு, வேசியைவிடப் பாம்பை நம்பு, பட்டாணியைவிட வேசியை நம்பு. -( ,, )

[பட்டாணி—கடன் கொடுத்து வாங்கும் ஆப்கானியர் வகுப்பைச் சேர்ந்தவன்.]

ஆந்தைக்குத்தான் தெரியும் ஆந்தையின் அருமை.-( ,, )

ஊசி வாளைப் பார்த்தால், 'அண்ணா' என்று அழைக்கும். -ரஷ்யா

## குடும்பம்

சிறு குடும்பத்திற்கு வேண்டியவை விரைவிலேயே கிடைக்கும். -இங்கிலாந்து

உன் பாட்டனுருக்கும் ஓர் அத்திப்பழம் கொடுத்து ஆதரித்து வா. —( ,, )

உறவினரைக் கடவுளே கொடுத்து விடுகிறார், நண்பர்களை மட்டும் நாமே தேர்ந்து கொள்ளலாம். —இங்கிலாந்து

உறவினர் குறைந்திருத்தல் ஓர் அதிருஷ்டம்தான். —கிரீஸ்

தன் குடும்பத்தை விட்டு ஓடுபவன் நெடுந்தூரம் சென்று கொண்டே யிருக்கவேண்டும். —லத்தீன்

## சகோதரர்

சகோதரனைப் போன்ற நண்பனில்லை, சகோதரனைப் போன்ற பகைவனுமில்லை. —இந்தியா

கைகளும் கால்களும் போன்றவர்கள் சகோதரர்கள். —சீனு

உடன் பிறந்தார்கள் ஒத்து வேலை செய்தால், மலைகளெல்லாம் பொன்னாகும். —( ,, )

சகோதரர்களாயிருங்கள், ஆனால் கணக்கு வைத்துக் கொள்ளுங்கள். —அரேபியா

சொந்த சகோதரர்கள் கவனமாகக் கணக்கு வைத்திருப்பார்கள். —சீனு

இளைய சகோதரனுக்குப் புத்தி அதிகம். —இங்கிலாந்து

சகோதரன் என்பவன் இயற்கையாக நமக்கு அளித்துள்ள நண்பன். —ஃபிரான்ஸ்

அவர்கள் சகோதரர்களானாலும், அவர்களுடைய பைகள் சகோதரிகளில்லை. —துருக்கி

தாயும் பிள்ளையும் ஒன்றானாலும், வாயும் வயிறும் வேறு. —தமிழ்நாடு

மூன்று சகோதரர்கள் மூன்று கோட்டைகள். —போர்ச்சுகல்

## மாமியார்

மாமியாருக்கு மரியாதை காட்டினால், தினமும் மூன்று முறை உன் வீட்டுக்கு வருவாள். —ஜப்பான்

கணவனின் தாய் அவன் மனைவிக்குச் சயித்தான்.
—ஜெர்மனி

ஒரே வீட்டிலுள்ள மாமியாரும் மருமகளும் ஒரே பைக்குள் கிடக்கும் இரண்டு பூனைகள் போன்றவர். —யூதர்

## மருமகன்

நல்ல மாப்பிள்ளை கிடைத்தவன் ஒரு மகனை அடைந்தவன்; தீய மாப்பிள்ளை கிடைத்தவன் தன் மகளை இழந்தவன்.
—ஃபிரான்ஸ்

## சுற்றம்

அன்புள்ள அந்நியனும் நமக்கு உறவுதான். —இந்தியா

உறவுள்ள இடத்தில் பகையும் இருக்கும். —( ,, )

உதிர்ந்த இறகைப் பசை வைத்துத்தான் ஒட்டவேண்டும்!
—ஆப்பிரிகா

நம் உறவினர்கள் செழிப்பாயிருப்பார்களாக, நாம் அவர்களிடம் செல்லாமல் இருப்போமாக! —போலந்து

அத்தையோடு நீ உண்ணலாம், ஆனல் தினமும் போய் உட்காரக் கூடாது. —இங்கிலாந்து

அதிக உறவினர், அதிகத் துன்பம். —ஃபிரான்ஸ்

நமக்குக் காசு நிறைய இருந்தால், அத்தை பிள்ளைகளும், அம்மான் பிள்ளைகளும் கிடைப்பார்கள். —இதாலி

நீ உன் மனைவியை நேசித்தால், அவளுடைய உறவினரையும் நேசிக்க வேண்டும். —யூதர்

உறவினர் செல்வமடையும் பொழுதுதான் நாம் அவர்களை மதிக்கிறோம். —( ,, )

உதிரம் நீரைவிடச் சூடுள்ளது. —எஸ்டோனியா

மிக நெருங்கிய பந்துக்களின் துவேஷமே அதிகமாயிருக்கும். —லத்தீன்

உறவினரைப் போய்ப் பார்த்து வரலாம், அவர்களுடனே வசித்திருக்க முடியாது. —அமெரிக்கா

சிறு புண்களையும் ஏழை உறவினரையும் ஒருபோதும் அலட்சியம் செய்யக் கூடாது. —சுவீடன்

உன் உறவினரே உன்னைக் கொட்டும் தேள்கள். —எகிப்து

## கைம்பெண்

விதவை துடுப்பில்லாத மரக்கலம். —சீனு

நிலம் மழையில்லாமல் அழும், விதவை கணவனில்லாமல் அழுவாள். —இந்தியா

கைம்பெண் வளர்த்த பிள்ளை மூக்குச் சரடு இல்லாத காளை. —( ,, )

பணக்காரியான விதவையின் கண்ணீர் விரைவில் உலர்ந்து விடும். —டென்மார்க்

விதவையை மணப்பவன் விரைவிலே முடிக்க வேண்டும். —இங்கிலாந்து

விதவை துக்கம் காக்கும் பொழுதே, விவாகம் செய்து கொள். —( ,, )

விதவைகள் எப்போதும் பணக்காரிகள். —( ,, )

பெருமையோடு ஒருத்தி ஒரு முறைதான் மனைவியாயிருக்க முடியும், ஒரு முறைதான் கைம்பெண்ணாயிருக்க முடியும். —ஃபிரான்ஸ்

செல்வமுள்ள கைம்பெண் ஒரு கண்ணால் அழுவாள், ஒரு கண்ணால் சிரிப்பாள். —போர்ச்சுகல்

அழகுள்ள விதவையை (விரைவில்) விவாகம் செய்து வைக்க வேண்டும், அல்லது புதைக்க வேண்டும், அல்லது கன்னிகா மடத்தில் அடைத்து வைக்க வேண்டும். —ஸ்பெயின்

விதவையின் வீட்டில் கொழுத்த சுண்டெலி இராது. —துருக்கி

வயதான கன்னியைவிட இளமையான விதவை மேல். —யூதர்

கைம்பெண் கூரையில்லாத கட்டடம். —எஸ்டோனியா

[மனைவியில்லாதவனுக்கும் இது பொருந்தும்.]

## அநாதைகள்

அநாதைக் குழந்தைக்கு அழுவதற்குச் சொல்லிக் கொடுக்காதே. —அரேபியா

தந்தை யில்லாத குழந்தை பாதி அநாதை; தாயில்லாத குழந்தை முழு அநாதை. —யூதர்

பிச்சைக்காரனாக வாழ்வதைவிட, பிச்சைக்காரனாக மடிவது மேல். —இங்கிலாந்து

தாயில்லாத மறியை எல்லாக் குட்டிகளும் முட்டும். —எஸ்டோனியா

அநாதைக் குழந்தைகளுக்குத் தந்தையரா யிருங்கள். —ரஷ்யா

## பழமை

பழைய இஞ்சியில் காரம் அதிகம். —சீனா

நம் முன்னோர்கள் தேவர்களா யிருந்தால், நாம் மனிதர்களாயிருக்கிறோம்; அவர்கள் மனிதர்களா யிருந்தால், நாம் கழுதைகளா யிருக்கிறோம். —யூதர்

உயர்ந்த கட்டடங்களுக்கு ஆழமான அடிப்படை இருக்கும். —இங்கிலாந்து

ஒருவன் தன் தாய்நாட்டிற்கு நல்லமுறையில் தொண்டாற்றினால், அவனுடைய முன்னோர்களைப் பற்றிக் கவலையில்லை. —வால்டேர்

பழைய துணி—புதிய கிழிசல். —எஸ்டோனியா

# ஒற்றுமை

ஒத்த மனமுடையவர்கள் சேர்ந்தால், கடலையும் வற்ற வைக்கலாம். -இந்தியா

நானும் என் சகோதரனும் எங்கள் அத்தானுக்குப் பகையானாலும், அந்நியன் வந்தால், நானும் அத்தானும் அவனுக்குப் பகையா யிருப்போம். -அரேபியா

வாதியும் எதிரியும் ஒரு படகிலே சென்றால், சாட்சிகள் நீந்தித்தான் செல்ல வேண்டும். -கீ. நா.

அறுந்த கயிற்றை முடிக்கலாம், ஆனால் முடிச்சு இருக்கும். -பாரசீகம்

ஒரு நகரத்திற்கு எதிராக மூன்று பேர்கள் ஒன்று சேர்ந்தால், அதை அழித்துவிடுவார்கள். -அரேபியா

மூன்று பிரிகளைக் கொண்ட சரட்டை விரைவில் அறுக்க முடியாது. -ப. ஏற்பாடு

தனியே நிற்கும் ஆடு ஓநாயிடம் சிக்கக்கூடும். -இங்கிலாந்து

ஒன்று சேர்ந்தால், நாம் வாழ்வோம்; பிரிந்தால், வீழ்ந்து விடுவோம். -( ,, )

பலமில்லாதவையும் ஒன்றுசேர்ந்தால், பலமுண்டாகிவிடும். -( ,, )

ஒருவருக்காக எல்லோரும், எல்லோருக்குமாக ஒவ்வொருவரும். -டூமாஸ்

ஒற்றுமைப்பட்டால் வலிமை அதிகம். -லத்தீன்

அடக்கமாக அடங்கிக் கிடப்பவர்களுக்கு ஒற்றுமையே சிறந்த வலிமை. -( ,, )

கயிறு கட்டாத கதிர்க்கட்டு வெறும் வைக்கோல்தான். -ரஷ்யா

எவன் என்னோடு இருக்கவில்லையோ அவன் எனக்கு எதிரானவன். -பு. ஏற்பாடு

கட்டாகவுள்ள கழிகளை ஒடிக்க முடியாது. -ஆப்பிரிகா

# விருந்து

வீட்டிலிருக்கும் விருந்தாளி கடவுளுக்கு நிகரானவர்.
—ஸெக்

வருகிற விருந்தினரை வரவேற்று, போகிறவரை விரைவில் வழியனுப்பு.
—போப்

விருந்தும் மருந்தும் மூன்று நாள். —தமிழ்நாடு

மருந்தே யாயினும் விருந்தோடு உண். —( ,, )

முதல் நாள் விருந்தாளி, மறுநாள் தொந்தரவு. —இந்தியா

அம்மான் வீடானலும், ஏழு நாட்களுக்குத்தான் வசதியாயிருக்கும். —( ,, )

விருந்தென்ருல், வீடு நிறையக் கூட்டம்; உபவாசமென்ருல், உலகமே திரும்பிப் பார்ப்பதில்லை. —சீனு

விருந்தினன் நாத்திகனுயினும், அவனைக் கௌரவிக்க வேண்டும். —அரேபியா

அழைத்து வந்தவனைவிட, அழையாமல் வந்தவன் மேல்.
—கால்மிக்

விருந்துச் சாப்பாடு கடனுக அளிக்கப்படுவது.
—ஆப்கானிஸ்தானம்

[நாமும் திரும்ப விருந்தளிக்க வேண்டும்.]

நேரம் கெட்ட நேரத்தில் வீட்டுக்கு வரும் விருந்தாளி துருக்கியனைவிட மோசமானவன். —பல்கேரியா

வீட்டு அம்மாளின் விருந்தாளி பாக்கியசாலி, வீட்டுக்காரனின் விருந்தாளி பாக்கியமற்றவன் —ஃபின்லந்து

விருந்தாளியின் பார்வை கூர்மையானது. —ஐஸ்லந்து

முன் தகவலோடு வரவும், அன்புடன் வழியனுப்பும்படி போய்விடவும்.—இதுதான் நல்ல விருந்தாளிக்கு அடையாளம். —லிதுவேனியா

விருந்தாளி அதிகாலையில் எழுந்திருந்தால், இரவில் அவன் நம்முடன் தங்க விரும்புகிருன் என்று தெரிந்து கொள்ள வேண்டும். —ரஷ்யா

விருந்தினரின் முதுகுப்புறம்தான் அழகு. —ஸ்பெயின்

விருந்தினர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்புவதை மறந்து விடக்கூடாது. —சுவீடன்

புது விருந்தை வீட்டினுள் அழையாமலிருத்தல் கேவலம், வந்த விருந்தை வெளியேற்றுவது அதைவிட மோசம். —லத்தீன்

அதிக உபசாரம் அபசாரத்திற்கு அறிகுறி. —சீனு

கடன் வாங்கி விருந்துகள் நடத்தி ஆண்டியாக வேண்டாம். —அபாகிரைஃபா

மற்றொருவர் மாளிகையில் விருந்து நன்ருகத்தான் இருக்கும். —ஹாலந்து

விருந்து முடிந்த பிறகு மனிதன் தலையைச் சொறிகிருன். —ஃபிரான்ஸ்

விருந்து நடத்திக் கொள்ளக் காலம் இருக்கிறது. —( ,, )

மூடர்கள் விருந்து நடத்துகிருர்கள், அறிவாளிகள் அதை அநுபவிக்கிருர்கள். —இதாலி

இன்று விருந்து, நாளை உபவாசம். —லத்தீன்

பெரிய விருந்தும் சிறிது நேரம்தான். —யூதர்

விருந்துகள் வைத்தியர்களுக்கு வேட்டை. —இங்கிலாந்து

விருந்து நடத்திருல் நண்பர்கள் கிடைத்துவிட மாட்டார்கள். —( ,, )

## இளமை

உலகம் இளையோருக்காக உள்ளது. —ஸ்லாவேகியா

அறிவாளி எவனும் இளமையை விரும்ப மாட்டான். —இங்கிலாந்து

கழுதையும் இளமையிலே அழகுதான். —இந்தியா

பத்து வயதில் விசித்திரக் குழந்தை, பதினைந்தில் கெட்டிக்கார இளைஞன், இருபதில் சாதாரண மனிதன். —ஜப்பான்

இளைஞன் வேலைக்கு வருகிறான், கிழவன் உணவுக்கு வருகிறான். —துருக்கிஸ்தானம்

புதிதாய்ப் பிறந்த கன்றுகள் புலிகளுக்கு அஞ்சமாட்டா. —சீனா

இளங் கன்று பயமறியாது. —தமிழ்நாடு

வாலிபம் என்பது பைத்தியம். —கீழ். நாடுகள்

கூர்மையான முள் இளமையிலிருந்தே அப்படி யிருப்பது. —ஆப்கானிஸ்தானம்

இளைஞர்களைக் கேட்டுப் பாருங்கள்: அவர்களுக்கு எல்லாம் தெரியும்! —ஃபிரான்ஸ்

இளமையில் சூதாடிகள், முதுமையில் பிச்சைக்காரர்கள். —ஜெர்மனி

இளமையில் ரோஜா மலர்களின் மீது படுத்திருந்தால், முதுமையில் நீ முட்களின்மீது படுத்திருப்பாய். —இங்கிலாந்து

வாலிபத்திற்கு அடிக்கடி தோல் உரிந்து, புதுத் தோல் உண்டாகும். —அயர்லந்து

வாலிபத்தைப் பாராட்டிப் பேசினால், அது மேன்மையடையும். —( ,, )

மென்மையான களியை எந்த உருவமாகவும் பிடிக்கலாம். —லத்தீன்

இளமையில் முகம் அழகு, முதுமையில் ஆன்மா அழகு. —சுவீடன்

இளைஞர்கள் கூட்டமாய்ச் செல்வார்கள், நடுவயதினர் ஜோடியாகச் செல்வர், வயோதிகர் தனியாகச் செல்வர். —( ,, )

ஒருவர் இளமையா யிருத்தல் ஒரு சமயம்தான். —ஃபிரான்ஸ்

வாலிபம் இடைவிடாத ஒரு வெறி, அது அறிவின்காய்ச்சல். —( ,, )

மது இல்லாமலே வெறி கொள்வது வாலிபம். —கதே

வாலிபப் பருவத்தை அநுபவிக்க வேண்டும். -கிரீஸ்

அடங்காமல் துள்ளும் குட்டிகளே பின்னைச்சிறந்த குதிரைகளாக ஆகின்றன. -( ,, )

தெய்வங்களுக்குப் பிரீதியானவர்கள் இளமையிலே இறக்கிருர்கள். -( ,, )

வாலிபம் துக்கத்துடன் தொடர்பு கொள்வதில்லை. -அரிஸ்டாட்டல்

குஞ்சுகளே வாத்துக்களைப் புல்வெளிக்கு அழைத்துச் செல்கின்றன. -இதாலி

வாலிபம் பறந்து செல்கின்றது. -லத்தீன்

காலை நேரம் இருக்கும் பொழுதே, மலர்களைப் பறியுங்கள். -( ,, )

பெருமையுள்ள செயல்கள் அனைத்தும் அநேகமாக இளைஞர்களாலேயே செய்யப் பெற்றிருக்கின்றன. -டிஸ்ரேலி

இறைவன் (படைத்த) ஆட்டுக் குட்டிகள் துள்ளி விளையாடும். -இங்கிலாந்து

வாலிபத்தில் கவனமின்றித் துள்ளினல், வயது காலத்தில் வருந்தவேண்டும். -( ,, )

இளமையைத்தான் அடக்கிக் கொண்டு வரவேண்டும், முதுமை தானே தன்னை அடக்கிக் கொள்ளும். -( ,, )

இளமையான தோள்களில் முதுமையான தலைகளை வைக்க முடியாது. -( ,, )

வாலிபத்திலும் வெள்ளைத் தாளிலும் எதை எழுதினலும் பதிந்துவிடும். -( ,, )

வாலிபம் நம்பிக்கைக் குரிய பருவம். -( ,, )

வயோதிகர் குளிர்காய்ந்து கொண்டிருக்கையில், வாலிபர்கள் நடனமாடுவார்கள். -( ,, )

# முதுமை

வீடு 'போ, போ' என்கிறது. 'காடு வா, வா' என்கிறது.
—தமிழ்நாடு

வயது முதிர்ந்த மனிதன் எலும்புகள் நிறைந்த மெத்தை போன்றவன். —இங்கிலாந்து

வயது ஆக ஆக அறிவும் பெருகும், மடமையும் பெருகும்.
—( ,, )

ஆலோசனைக்கு முதியோர், போருக்கு இளைஞர். —( ,, )

முதுமையில் யோசிக்கவேண்டும், இளமையில் செயல் புரிய வேண்டும். —( ,, )

காதலைப்போல, வயதையும் மறைக்க முடியாது. —( ,, )

மனிதனையும் விலங்கையும் அடக்கி விடுபவை வயதும், விவாகமும். —( ,, )

வயது கூடக் கூட, கல்லறை நெருங்கி வருகிறது. —( ,, )

முதுமையில் இளமையை விரும்புவோர் இளமையில் முதியவரா யிருக்க வேண்டும். —( ,, )

முதுமையே ஒரு நோய். —( ,, )

வயோதிகம் நோய்கள் சேரும் துறைமுகம். —( ,, )

மரணத்தைவிட அஞ்சத்தக்கது முதுமை. —( ,, )

முதுமை உள்ளே வந்தால், புத்தி வெளியே போய்விடும்.
—ஷேக்ஸ்பியர்

ஆகக்கூடிய வயதுடையவனும் இறந்துதான் போனன்.
—அயர்லந்து

வழித்துணைக்கு முதுமை ஏற்றதன்று. —டென்மார்க்

இதயம் எவ்வளவு முதுமையோ, அவ்வளவே ஒருவனுடைய முதுமை. —ஃபிரான்ஸ்

பெண்டிர்க்கு நரகம் முதுமை. —( ,, )

முதுமையால், முகத்தைக்:காட்டிலும், மனத்திலே அதிகச் சுருக்கங்கள் விழும். —மான்டெயின்

வயதானவர்களுக்குத் தூரத்துப் பார்வை அதிகம்.
-ஜெர்மனி

இளேயோர் அறிய மாட்டார், முதியோர் மறந்துவிடுவர்.
-( ,, )

வயோதிகனைப் போல வாழ்வில் பற்றுடையவர் இல்லை.
-ஸாஃபாகிளிஸ்

கிழவர்கள் இரண்டாவது முறையாகக் குழந்தைகள்.
-கிரீஸ்

புருவின் இளமையினும் கழுகின் முதுமை மேலானது.
-( ,, )

இளமை ரோஜா மாலை, முதுமை முள் மகுடம். -யூதர்
இளமையில் தேவன், முதுமையில் சயித்தான். -எராஸ்மஸ்
முதுமையும் மகிழ்ச்சியும் சேர்ந்திருத்தல் அரிது. -ஸெனீகா
கிழவனுக்குத் தண்ணீர் இறங்கவில்லையானல், சமாதியைத் தயாரிக்கலாம். -ஸ்பெயின்
குழவிப் பருவத்தில் அழுகை அதிகம், வயது காலத்தில் பேச்சு அதிகம். -இந்தியா
வயதான பின்பு உன் குழந்தைகளுக்குப் பணிந்து நட.
-ஜப்பான்

யார் தலைமயிர்தான் நிறம் மாருமலிருக்கும்? -சீன
பற்கள் விழுந்த பிறகு, நாவு மட்டும் ஆடிக்கொண்டே யிருக்கும். -( ,, )
ஆகாத காலத்தில் கிழவர்களுக் கெல்லாம் பற்கள் விழாம லிருக்கும். -அரேபியா
இளமையின் நினைவு வந்தால் நெட்டுயிர்ப்புத்தான். -( ,, )
கரடிக்கு வயதானல், அது குட்டிகளுக்கு விளையாட்டுக் கருவியாகும். -குர்திஸ்தானம்
கிழவிகளை நீ ஏமாற்ற முடிந்தால், சயித்தானையே நீ பிடித்து விடலாம். -ஐ. நாடோடிகள்
நாற்பது வயது இளமையின் முதுமை; ஐம்பது வயது முதுமையின் இளமை. ஃபிரான்ஸ்

சயித்தான் தான் சாதிக்க முடியாத வேலைக்கு ஒரு கிழவியை அனுப்புவான். —போலந்து

வயது முதிர்ந்தவரைப் பார்த்து, உடம்பு எப்படி?' என்று கேட்க வேண்டாம், ' இப்போது என்ன நோய்?' என்று கேட்கவும். —( ,, )

முதியோரை மதித்தல் ஆண்டவனை மதிப்பதாகும். —பல்கேரியா

மனிதன் இருமுறை குழந்தை. —எஸ்டோனியா

கிழவருக்கு மரணம் கண் முன்னால் நிற்கும், இளைஞருக்குப் பின்புறம் நிற்கும். —( ,, )

மனிதன் முதுமையடைகிறான், ஆனால் பிணி இளமையடைகின்றது. —( ,, )

தொட்டிலைத் தாங்குபவள் கிழவி, அவளே குழந்தையின் கைதி. —எஸ்டோனியா

கிழட்டுப் பசுவுக்குத் தான் கன்றாயிருந்தது நினைவிராது. —( ,, )

கிழவிகளையும், ஓநாய்களையும் படைத்து, இறைவன் உலகைப் பாழாக்கி விட்டான். —( ,, )

வயது முதிர்ந்தவன் நெடுநாளைக்குக் குழந்தையாயிருப்பான். —ஐஸ்லந்து

தாடியில்லாதவர்களுக்குச் சுவர்க்கத்தில் இடமில்லை. —ரஷ்யா

கிழவியும் சயித்தானும் எப்பொழுதும் கூடியே யிருப்பார்கள். —செர்பியா

வயதானவருக்கு அவர் கேட்கு முன்னால் கொடு. —ஆப்பிரிகா

தாடியுள்ள வாய் பொய் சொல்லாது. —( ,, )

முதுமைக்கு அஞ்சுங்கள், அது தனியாக வருவதில்லை. —கிரீஸ்

# உடற்குறைகள்

முடவன் ஒவ்வோர் அடியிலும் தடுக்கி விழுவான்.—இந்தியா

குருடனை விருந்துக்கு அழைத்தால், இரண்டு விருந்தினர்கள் வருவார்கள்· —( ,, )

ஒடிந்த கையைச் சட்டைக்குள் மறைத்துக்கொள். —சீனு

குருட்டுப் பூனை செத்த எலியைத்தான் பிடிக்கும். —( ,, )

குருடன் பார்க்க முடியவில்லை என்பதால், வானத்தின் நீல நிறம் குறைந்து விடுவதில்லை. —டென்மார்க்

குருடனும் சில சமயங்களில் தானியத்தைக் கண்டுபிடிக்கிருன். —ஃபிரான்ஸ்

குருடன் கொடிபிடித்துச் சென்ருல், அவன் பின்னுல் செல்பவர்களுக்கு ஆபத்துத்தான். —( ,, )

சூரியனையே பார்க்க முடியாதவன் குருடன்தான். —இதாலி

மனம் வேறிடத்தில் இருந்தால், (எல்லோருக்குமே) கண்கள் குருடுதான். —லத்தீன்

குருடர்களின் நடுவில் நீங்களும் கண்களை மூடிக்கொள்ளுங்கள். —துருக்கி

தீமையைப் பார்ப்பதைவிட, குருடாயிருப்பது மேல். —இங்கிலாந்து

கல்லும் வயிரமும் குருடனுக்கு ஒன்றுதான். —( ,, )

கூனனுக்குத் தன் கூனல் தெரியாது, பக்கத்திலிருப்பவன் கூனலையே பார்ப்பான். —இங்கிலாந்து

திகைத்து நிற்பவனைவிட நொண்டி விரைவாக வந்துவிடுவான். —( ,, )

கூனன் தன் கூனலையும் சுமக்க வேண்டியிருக்கிறது. —யூதர்

நொண்டி வரும்வரை நாமும் காத்திருக்க வேண்டும். —ஃபிரான்ஸ்

# ஆரோக்கியம்

நல்ல காற்று ஆயிரம் அவுன்ஸ் மருந்துக்குச் சமானம்.
—ஜப்பான்

ஆரோக்கியமுள்ளவனுக்குத் தினசரி திருமணம்தான்.
—துருக்கி

முகமலர்ச்சி, நிதானமான வாழ்க்கை, அமைதி—இவை உள்ள இடத்தில் வைத்தியருக்கு வேலையில்லை.
—ஜெர்மனி

மக்கள் ஆரோக்கியமாயிருந்தால், வைத்தியர்களுக்கு நோய் வரும்.
—( ,, )

இரவில் ஓர் ஆப்பிளை உண்டு வந்தால், பல் வைத்தியருக்கு நம்மிடம் வேலையில்லை.
—இங்கிலாந்து

சூரியன் போகாத இடத்திற்கு வைத்தியர் போகிறார்.
—இதாலி

செல்வமில்லாமல் ஆரோக்கியம் மட்டும் இருந்தால் அதுவே பாதி நோயாகும்.
—( ,, )

உடல் நலமுள்ளவனுக்கு ஒவ்வொரு நாளும் விருந்துதான்.
—துருக்கி

ஒரு வேளை உணவை இழத்தல் நூறு வைத்தியர்களை அழைப்பதைவிட மேலானது.
—ஸ்பெயின்

இரவுச்சாப்பாட்டிற்கு முன்னும் பின்னும் சிறிது உலாவுதல் நலம்.
—லத்தீன்

நன்றாயிருக்கும் உடலிலேயே நல்ல மனம் தங்கியிருக்கும்.
—ஜெர்மனி

உடல் நலமாயிருக்கும்பொழுதே நோயைப்பற்றி ஆராய்ந்து தெரிந்து கொள்.
—( ,, )

ஐந்துக்கு எழுந்திரு, ஒன்பதுக்கு உணவருந்து, ஐந்துக்குச் சாப்பிடு, ஒன்பதுக்கு உறங்கு.
—ஃபின்லந்து

ஒருவனுக்கு உடல் நலம் குறைவு என்றால், எல்லாமும் குறைவு என்று பொருள்.
—ஃபின்லந்து

**உணவு, அமைதி, முகமலர்ச்சி ஆகிய மூவருமே உலகில் தலைசிறந்த மருத்துவர்கள்.** –இங்கிலாந்து

**தாகத்தோடு** படுக்கச் செல்பவன் **உடல்** நலத்தோடு **விழித்தெழுவான்.** –( ,, )

**நல்ல மனைவியும் உடல்** நலமும் மனிதனின் சிறந்த செல்வம் –( ,, )

முன்னிரவில் **தூங்கி,** அதிகாலையில் எழுந்திருப்பவனுக்கு **உடல்** நலமும், செல்வமும் அறிவும் பெருகும். –( ,, )

**வைத்தியர்களைவிட உணவுமுறை அதிகக் குணமுண்டாக்கும்.** –( ,, )

நீண்ட நாள் வாழ்வதற்குக் கதகதப்பான **உடையணியவும் மிதமாக உண்ணவும், நிறைய நீர் பருகவும்.** –( ,, )

மதிய **உணவுக்குப்** பின் சிறிது நேரம் அமர்ந்திரு, இரவு **உணவுக்குப்பின்** ஒரு மைல் நட. –( ,, )

குளிர்ச்சியான தலையும், சூடான பாதங்களும் நீண்ட வாழ்வுக்கு **உகந்தவை.** –( ,, )

ஆரோக்கியமுள்ள **உடல்** ஆன்மாவுக்கு விருந்து மண்டபம்; நோயுள்ள **உடல்** அதன் சிறைக்கூடம். –பேக்கன்

## நோய்

கோழிக்கு ஊசிப்புண் போதும். –இந்தியா

**எப்பொழுதும் நோயுள்ளவனுக்குப் பெயர் ஆரோக்கியசாமி.** –( ,, )

**முதல்** சாமத்தில் எல்லோரும் **விழித்திருப்பர், இரண்டாவதில் போகி விழித்திருப்பான்.** மூன்றுவதில் **திருடன் விழித்திருப்பான், நான்காவதில் நோயாளி விழித்திருப்பான்.** –( ,, )

**நோய் வந்து விட்டால் எந்த வைத்தியரையாவது அழை.** –சீனு

வெளிச்சம் வருகிற சாளரத்தை அடைத்தல் வைத்தியர் வருவதற்குக் கதவைத் திறத்தலாகும். –( ,, )

வயிற்றுப் பக்கம் நோயில்லையானால் நோயாளி இறக்க மாட்டான். –( ,, )

கால் வலியை மறக்கலாம், தலைவலியை மறக்க முடியாது. –ஆர்மீனியா

நோய் குணமாகாது என்று தெரிந்தால் இருக்கிற மருந்தை ஒருவன் வீணாக்கமாட்டான். –ஜெர்மனி

நோயே ஒரு வைத்தியன். –( ,, )

நோயைப் போற்றி வைப்பவனிடம் அது உறவு கொண்டாடும். –( ,, )

நோயாளியிடம் பணம் இருப்பதற்குத் தக்கபடி பிணி நீடிக்கும். –( ,, )

உடலுக்கு நோய் வந்தால், மனத்திற்கு வந்துவிடும். –போஸ்னியா

நோயின் தந்தை எவனாயிருந்தாலும், தாய் உணவுக் கோளாறுதான். –இங்கிலாந்து

'ஆஸ்துமா' வந்தவர் நெடுநாள் வாழ்வர். –அயர்லந்து

முகத்தில் ஒரு பரு வந்துவிட்டால் உடலுக்குள் சயித்தான் புகுந்த மாதிரி. –( ,, )

ஒவ்வொரு பிணியும் ஒரு வைத்தியன். –( ,, )

நீடித்த நோய்களுக்குப் பொறுமைதான் மருந்து. –( ,, )

வரட்சியான இருமல் வந்துவிட்டால், எல்லா நோய்களும் தீர்ந்துவிடும். –வேல்ஸ்

[மரணம்]

மூக்கின்மேல் பரு வந்தால் அது ஆளை மறைத்துவிட்டுத் தானே முன்னால் தெரியும். –பல்கேரியா

ஆரோக்கியத்தின் அருமையை நோயில்தான் அறியலாம். –ஹங்கேரி

ஈக்கும் இருமலுண்டு. –இதாலி

நோய் வந்தவுடனேயே அதைக் கவனிக்க வேண்டும். -லத்தீன்

நோயின் கசப்பிலிருந்துதான் மனிதன் ஆரோக்கியத்தின் இனிமையை அறிகிறுன். -கடலோனியா

நோயாளியின் நண்பன் அவனுடைய கட்டில்தான் -ஆப்பிரிகா

நோயை மறைத்தல் அபாயம். -லத்தீன்

நோயைக் கண்டுபிடித்தலே ஆரோக்கியத்திற்கு ஆரம்பம் -ஸ்பெயின்

வரும்போதுநோய் குதிரைமேல் வரும், நீங்கும்போது நடந்து செல்லும். -இங்கிலாந்து

காலந்தோறும் நோயும் மாறுகின்றது. -( ,, )

தடுமனுக்கு உணவு, காய்ச்சலுக்கு பட்டினி. -( ,, )

புண்ணும் கட்டியும் எங்கு வேண்டுமானுலும் உண்டாகும். -ஜப்பான்

பிணி ஒவ்வொரு மனிதனுக்கும் யஜமானன். -டென்மார்க்

பிணியே வராதவன் முதல் வகுப்பிலேயே இறந்து போவான் -இங்கிலாந்து

நோயாளியின் அறை பிரார்த்தனைக் கூடம். -( ,, )

நோயாளி எதுவும் பேசலாம். -இதாலி

நோயுற்ற காலங்களில் ஆன்மா தன் வலிமையைச் சேர்த்து கொள்கின்றது. -லத்தீன்

நோய் நாம் யார் என்பதைக் காட்டுகின்றது. -( ,, )

நோயாளிக்கு தேனும் கசக்கும். -ரஷ்யா

## வைத்தியம்

காலம்தான் தலை சிறந்த வைத்தியர். -யூதர்

ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன். -தமிழ் நாடு

வைத்தியரின் மரங்களுக்கு நம் கண்ணீர்தான் தண்ணீர்.
—இந்தியா

வைத்தியருக்கு மூக்கிலே படர்தாமரை. —( ,, )

அரைகுறை வைத்தியனால் உயிருக்கு ஆபத்து, அரைகுறை முல்லாவால் சமயத்திற்கே ஆபத்து. —( ,, )

[முல்லா—முஸ்லிம்களின் குரு]

நீதிபதி, வைத்தியர் இருவரிடமிருந்தும் இறைவன் என்னைக் காப்பானாக. —துருக்கி

உடலைக் குணப்படுத்தலாம், மனதைக் குணப்படுத்த முடியாது. —சீனா

வைத்தியர் தூரத்திலிருந்து கொண்டே மருந்து அனுப்புதல், குருட்டுக் கண்ணால் பார்ப்பது போலாகும்.
—யூதர்

இலவச வைத்தியம்—பயனற்ற மருந்தாயிருக்கும். —( ,, )

நோயை சொன்னால்தான், குணமாக மருந்து கிடைக்கும்.
—ஃபிரான்ஸ்

வைத்தியர் வந்தாலே, நோய் குணமாகத் தொடங்கிவிடும்.
—( ,, )

வைத்தியர்கள் மட்டும் பொய் சொல்ல அனுமதியுண்டு.
—( ,, )

மெத்தப் படித்த வைத்தியரைவிட ஆக்கமுள்ள வைத்தியர் மேல். —ஜெர்மனி

வைத்தியர் இளமையா யிருந்தால், எப்பொழுதும் மூன்று சவக்குழிகள் தயாரா யிருக்கவேண்டும். —ஜெர்மனி

வைத்தியனுக்கு மூன்று விஷயங்கள் தேவை: சிங்கத்தின் இதயம், பெண்ணின் கரம், கழுகின் பார்வை. —( ,, )

நோயைக் கொன்றாலும், ஆளைக் கொன்றாலும், வைத்திய ருக்கு 'ஃபீஸ்' உண்டு. —போலந்து

பிச்சைக்காரர்களுக்குள் அவ்வளவு துவேஷம் கிடையாது. வைத்தியர்களுக்குள்ளே அதிக வெறுப்பு உண்டு.
—( ,, )

தனக்குத் தானே வைத்தியம் செய்துகொள்பவனுடைய நோயாளி மூடன். —இங்கிலாந்து

பல வைத்தியர்கள் பார்த்தால், மரணம் நிச்சயம்தான். —ஸெக்

தண்டனை யடையாமல் கொல்லக்கூடியவர் வைத்தியர் ஒருவரே. —ஹங்கேரி

எல்லோரும் ஆரோக்கியமா யிருந்தால், வைத்தியர் பாடு திண்டாட்டம். —( ,, )

கடுமையான நோய்க்குக் கடவுளே வைத்தியர். —( ,, )

ஒரு தொழிலும் தெரியாதவன் வைத்தியனுகிறன். —இதாலி

வைத்தியர்கள் அதிகமானல், நோய்கள் பெருகும். —போர்ச்சுகல்

வைத்தியர்களும் நீதிபதிகளும் பயமில்லாமல் கொலை செய்கிறர்கள். —ரஷ்யா

ஒவ்வொரு பிணிக்கும் வைத்தியரை நாடவேண்டாம்; ஒவ்வொரு வழக்குக்கும் வக்கீலை நாட வேண்டாம். —ஸ்பெயின்

மரணம்தான் கடைசி வைத்தியர். —( ,, )

நீ வைத்தியரை வெறுத்தால், பிணியையும் வெறுக்க வேண்டும். —ஆப்பிரிகா

அநுபவமில்லாதவன் வைத்தியரைக் குணப்படுத்திவிடுவான். —( ,, )

நீயோ வைத்தியரை ஏமாற்றிவிட்டாய்; அடுத்த நோய்க்குச் சொந்த வைத்தியம் செய்துகொள். —( ,, )

வைத்தியர்களில் வயதானவர், வக்கீல்களில் வாலிபர். —இங்கிலாந்து

குணப்படுத்துவது கடவுள், சம்மானம் பெறுவது வைத்தியர். —( ,, )

தேவை வருமுன்பே வைத்தியருக்கு மரியாதை செய்ய வேண்டும். —( ,, )

வைத்தியரிடத்திலும் வக்கீலிடத்திலும் உண்மையை மறைக்காதே. —இதாலி

வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு. —தமிழ்நாடு

ஒன்றும் தெரியாத வைத்தியன் கொலைகாரனைத் தவிர வேறில்லை. —சீனு

வாலிப நாவிதன், வாலிப வைத்தியன் இருவரிடமும் எச்சரிக்கையா யிருக்கவேண்டும். —இங்கிலாந்து

வைத்தியர் குணமாக்கினல் சூரியனுக்குத் தெரியும், வைத்தியர் கொன்றுவிட்டால், பூமிக்குத் தெரியும். —( ,, )

வைத்தியர்கள் கலந்து ஆலோசிப்பதற்குள், நோயாளி இறந்து விடுகிருன். —( ,, )

வைத்தியருக்குக் கொடுப்பதை ரொட்டிக்காரனுக்குக் கொடு. —ஃபிரான்ஸ்

வைத்தியருக்குக் கொடுப்பதை இறைச்சிக்காரனுக்குக் கொடு. —ஃபிரான்ஸ்

நோயைக் காட்டிலும் வைத்தியருக்கு அஞ்ச வேண்டும். —( ,, )

ஒவ்வொரு வைத்தியரும் தம் மாத்திரைகளே உயர்ந்தவை என்று எண்ணுகிருர். —ஜெர்மனி

புது வைத்தியர் புதிதாகச் சவக்குழி தோண்டுபவர். —( ,, )

நல்ல வைத்தியர் எவரும் தாம் மருந்து உண்பதில்லை. —இதாலி

வைத்தியர் மனத்திற்கு ஆறுதலளிப்பவரைத் தவிர வேறில்லை. —லத்தீன்

நோய்களுக்கு அஞ்சி ஓடும் பொழுது, நீங்கள் வைத்தியர் கைகளில் சிக்குகிறீர்கள். —( ,, )

சூரியன் ஒரு போதும் வராத இடத்திற்கு வைத்தியர் அடிக்கடி வருவார். —ஸெக்-

## மருந்து

சுத்தமான தண்ணீரே உலகின் முதன்மையான மருந்து.
—ஸ்லாவேகியா

இனிப்பான மருந்துகளும், இன்பமான நோய்களும் உண்டா? —இந்தியா

சாவைத் தடுக்க மருந்தில்லை. —( ,, )

ஒற்றடம் போடுதல் பாதி வைத்தியம். —( ,, )

பூடு தின்ற பின்னும் நோய் தீரவில்லை. —( ,, )

[உள்ளிப்பூடு அவ்வளவு விசேஷமாகக் கருதப்படுகின்றது.]

பட்டினி யிருத்தல் பரம ஔடதம். —( ,, )

விடத்திற்கு மருந்து விடம்தான். —( ,, )

மருந்து கால் பாகம், மதி முக்கால் பாகம். —தமிழ்நாடு

குரங்குப் புண்ணுக்கு மருந்தில்லை. —( ,, )

மருந்தை உண்டு பத்தியம் காவாதவன் வைத்தியரின் திறமையை வீணாக்குகிறான். —சீனா

மருந்து கொல்லுவதில்லை, வைத்தியரே கொல்லுகிறார்.
—( ,, )

பல மனிதர்கள் நோய்களால் மடிவதில்லை, தாம் உண்ட மருந்துகளாலேயே மடிகின்றனர். —ஃபிரான்ஸ்

அளவில்லாவிட்டால், மருந்தும் விஷமாகும். —போலந்து

கடவுள் ஒவ்வொரு பிணிக்கும் ஒரு பச்சிலை அளித்திருக்கிறார். —பல்கேரியா

வாழவேண்டியவனுக்கு மருந்துக்குப் பஞ்சமில்லை. —( ,, )

பச்சிலைகளில் சிறந்தவை பசி, உழைப்பு, வியர்வை.
—குரோஷியா

நாள்தோறும் ஆப்பிள் உண்பவன் வைத்தியர் பிழைப்பைக் கெடுக்கிறான். —ஸெக்

நாய்க்கடிக்கு நாயின் ரோமம் மருந்தாகும். -ஹங்கேரி

வெந்நீரும், 'எனிமா'வும் கொண்டே எல்லாப் பிணிகளை யும் குணமாக்கலாம். -இதாலி

[குடலில் நீரேற்றும் குழாய் 'எனிமா.']

பூடு ஏழு பிணிகளைத் தீர்க்கும். -ரஷ்யா

தலையில் வலியெடுத்தால், முட்டில் தைலம் தடவு. -ஸ்பெயின்

உணவோடு சேர்த்து மருந்தைக் கொடுத்தால், நோய் குணமாகா விட்டாலும், பசியாவது ஆறும். --ஆப்பிரிகா

## மரணம்

மரணத்தின் காரணம் பிறப்பு. -பௌத்தம்

மனிதன் பிறந்தவுடன் மரிக்கத் தொடங்குகிறான். -இங்கிலாந்து

இறந்தவனுக்குக் குளிரில்லை. -( ,, )

திடீர் மரணம் திடீர் இன்பம். -( ,, )

வைத்தியருக்கும் மரணம் உண்டு. -( ,, )

மரணத்துறகு அஞ்சுபவன் வாழ்பவனாகான். -( ,, )

பிறப்பது போலவே, இறப்பதும் இயற்கை. -( ,, )

முற்றும் கனிந்த கனி முதலில் விழும். -( ,, )

பிறக்கும் பொழுதுதான் நாம் அழுகிறோம், மரிக்கும் பொழுதன்று. -( ,, )

எல்லா மனிதரும் சீரஞ்சீவிகளா யிருக்கவே விரும்பு கின்றனர். -( ,, )

வாழ்வில் (நன்கு) வாழாதவன் மரணத்திற்குப் பின்னும் வாழமாட்டான். -( ,, )

மறு வாழ்க்கையை அலட்சியம் செய்பவன் இந்த வாழ்க் கைக்குத் தீங்கிழைக்கிறான். -யங்

நித்தியமான வாழ்க்கையைத் தவிர வேறில்லை என்றே நான் நினைக்கிறேன் என்பதைச் சத்தியமாய்ச் சொல்லுகிறேன். -விட்மன்

நித்தியமான வாழ்க்கையை விரும்புதல் ஒரு பெரிய ஆவுறுதலை நிரந்தரமாக நிலைக்கும்படி செய்வதாகும். -ஷேக்ஸ்பியர்

நீயோ புழுதி, புழுதிக்கே நீ திரும்பவேண்டும். -ப. ஏற்பாடு

இலை வாடுவது போல், நாம் அனைவரும் வாடிவிடுவோம். -( ,, )

மரணம் கொம்பு ஊதிக் கொண்டு வருவதில்லை.-டென்மார்க்

அதிருஷ்டம் சிலருக்கே உண்டு, மரணம் எல்லோர்க்கும் உண்டு. -( ,, )

ஒருவருக்காக மற்றொருவர் உயிர் துறக்க முடியாது. -ஃபிரான்ஸ்

பாம்பு சாகும் பொழுதே அதன் விடமும் செத்துவிடும். -( ,, )

மரணம் என்பது புனிதமான உறக்கம். -கிரீஸ்

பகலை இரவில் புகழுங்கள், வாழ்வை முடிவில் புகழுங்கள். -( ,, )

புகழ் பெற்ற மனிதர்க்கு உலகு அனைத்துமே சமாதி.-( ,, )

மரணம் ஆண்டிக்கும் உண்டு, போப்பாண்டவருக்கும் உண்டு. -இதாலி

இறந்தவன் ஒருவனைத் தூக்க நாலு பேர் வேண்டும்.-( ,, )

ஆறடி நிலம் அனைவரையும் சமானமாக்குகின்றது. -( ,, )

மரணம் மருத்துவருக்கு அஞ்சாது. -லத்தீன்

ஓடுகிறவனுக்கு முன்னால் மரணம் ஓடி நிற்கும். -( ,, )

மரணம்—வாழ்க்கையின் வாயில். -( ,, )

இறந்தவனுக்கு மரியாதை நம் நினைவு, கண்ணீர் அன்று. -( ,, )

மரணத்தின் நினைவோடு வாழ்வாயாக. -( ,, )

செத்தவனைத் தொடர்ந்து கொன்றவனும் விரைந்து செல்கிறான். -லத்தீன்

தன் காலம் முடியாமல் எவனும் இறப்பதில்லை. -யூதர்

இளைஞர் இறக்கக்கூடும், முதியோர் இறந்தே ஆக வேண்டும். -( ,, )

வீட்டிலே மருந்து இருக்கிறது, ஆனாலும் நாம் மரிக்க வேண்டியவர்களே. -இந்தியா

பிறப்பதற்கு ஒரு நாளுண்டு, இறப்பதற்கும் ஒரு நேரமுண்டு. -சீனு

பிறத்தல் என்பது வெளியே வருதல், இறத்தல் என்பது திரும்பிச் செல்லல். -( ,, )

மரணம் நமது விருந்தாளி. -குர்திஸ்தானம்

மனிதன் பிறக்கும் பொழுது, அவன் அழுகிறான், மற்றவர்கள் சிரிக்கிறார்கள்; அவன் இறக்கும் பொழுது, அவன் சிரிக்கிறான், மற்றவர்கள் அழுகிறார்கள். -ஜெர்மனி

சவப் பெட்டி தொட்டிலின் சகோதரன். -( ,, )

(நாள் பார்த்துவர) மரணத்திடம் பஞ்சாங்கம் கிடையாது. -இங்கிலாந்து

செத்த மீன்கள் வெள்ளத்தோடு போய்விடும். -( ,, )

மரணமே உலகின் யசமானன். -அயர்லந்து

மரணம் உண்மையே பேசும். -பல்கேரியா

மரணமில்லாவிட்டால், வாழ்க்கை அற்புதமானதுதான். -( ,, )

அவன் பாயைச் சுருட்டும் நேரம் வந்து விட்டது. -ஜெர்ஸீ [மரணத் தருவாய்]

மனிதன் மரணத்தின் குழந்தை. -எஸ்டோனியா

சட்டை உடம்போடு ஒட்டியிருக்கும், அதைவிட ஒட்டியுள்ளது மரணம். -எஸ்டோனியா

பிறப்பைத் தப்ப முடியாதவன் இறப்பையும் தப்பமுடியாது. -பின்லந்து

உலகத்தைவிட்டு வெளியேறுவதற்குப் பல வழிகள் இருக்கின்றன; ஆனால் இங்கு வருவதற்கு ஒரே வழிதான் உண்டு. -போர்ச்சுகல்

மரணத்திற்கு விலை உண்டு; வாழ்வைக் கொடுத்து மரணத்தை வாங்க வேண்டியிருக்கிறது. -ரஷ்யா

மரணம் வீட்டுக்கு வந்துவிட்டால், மரண அவஸ்தை தீர்ந்தது. -( ,, )

கண்ணீர் உயிரைப் பிடித்து வைக்க முடியாது. -ஆப்பிரிகா

செத்தவற்றிலும் உயிருள்ளவை இருக்கும், உயிருள்ளவைகளிலும் இறந்தவை இருக்கும். -( ,, )

மரணம் வீட்டின் உடைமைக்காரன், அந்நியனல்லன். -( ,, )

தொடர்ந்து நடுங்கிக் கொண்டிருப்பதைவிட, ஒரேயடியாக மரித்தல் மேலானது. -கிரீஸ்

மனிதர் நியாயமற்ற முறையில் மரணத்தை வெறுக்கின்றனர்; அவர்களுடைய பல துயரங்களுக்கும் அதுவே காப்பாயிருக்கின்றது. -( ,, )

மரணத்தில் பயங்கரம் ஒன்றுமில்லை, கேவலமான மரணமே அத்தகையது. -( ,, )

நல்ல மரணம் வாழ்வு முழுவதும் பெருமை யளிப்பது. -இதாலி

உழைப்பு, கவலைகளிலிருந்து ஓய்வு பெறுவது மரணம். -லத்தீன்

மரணம் எல்லாப் பொருள்களையும் சமமாக்குகின்றது.-( ,, )

மரணம் உனக்காக எங்கே காத்திருக்கும் என்பது நிச்சயமில்லை; ஆதலால் அதை எங்குமே எதிர்பார்க்க வேண்டும். -லத்தீன்

போய்விட்டான் என்று நீங்கள் சொல்பவன் (நமக்கு) முன்னால் போய் நிற்கிறான். -( ,, )

உன் கடைசி நாளை எண்ணி அஞ்சவும் வேண்டாம், அதை விரும்பவும் வேண்டாம். -( ,, )

இறந்தோரைப் பற்றிப் பெருமையாக மட்டும் பேசு.-லத்தீன்

மரணத்திற்கு மருந்தில்லை. -( ,, )

மரணம் வயது முதிர்ந்ததைக் கொண்டு போவதில்லை, பழுத்ததையே கொண்டு போகின்றது. -ரஷ்யா

மரணம் குட்டிகளையும், ஆடுகளையும் சேர்த்து விழுங்குகின்றது. -ஸ்பெயின்

மரணம் உண்மையைப் புலப்படுத்துகின்றது. -யூதர்

## கல்லறை

புதைப்பதற்கு எந்த நிலமும் நல்லதுதான். -ஜப்பான்

வாழ்க்கையில் முதன்மையான விஷயம் நல்ல முறையில் அடக்கம் செய்யப்படுதல். -சீனு

இடுகாடுதான் குடிக்கூலி குறைவான விடுதி. -நீகிரோ

பூமிதான் தக்க புகலிடம். -இங்கிலாந்து

கல்லறையுள் அரசன் யார்? ஆண்டி யார்? -( ,, )

தங்க முலாம் பூசிய கல்லறைகளினுள்ளும் புழுக்களே உள்ளன. -ஷேக்ஸ்பியர்

நம்முடைய வாழ்வு சமாதியை நோக்கிச் செல்லும் யாத்திரையாகத்தான் இருக்கிறது. -இங்கிலாந்து

பொதுவாக எல்லோரும் சந்திக்குமிடம் சமாதிதான் -( ,, )

வயது கூடக்கூட, நாம் கல்லறையை நெருங்கிக் கொண்டேயிருக்கிறோம். -( ,, )

கல்லறையிலேதான் ஓய்வுண்டு. -யூதர்

நாம் வாங்குகிற ஒவ்வொரு மூச்சும் நம் சமாதியை நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியாகும். -அரேபியா

## நன்மையும் தின்மையும்

ஒவ்வொரு நன்மையிலும் ஒரு தின்மையும் உண்டு.-லத்தீன்

நல்லது நத்தை வேகத்தில் பரவும், தீயது சிறகடித்துப் பறக்கும். -இந்தியா

நன்மைகள் ஜோடி ஜோடியாக வருவதில்லை, சோகங்கள் தனித்தும் வருவதில்லை. —சீனு

விளக்கை ஏற்றுவதைவிட அணைப்பது எளிது. —ஜெர்மனி

வாரந்தோறும் ஞாயிறு உண்டு, அத்துடன் வெள்ளியும் உண்டு. —போலந்து

[ஞாயிறு ஓய்வு நாள், வெள்ளி உபவாச நாள்.]

நன்மை செய்வதில் நோக்கத்தைவிடச் செயல்தான் முக்கியம்; தீமையில் செயலைவிட நோக்கமே முக்கியம். —ஸ்பெயின்

நல்லது செழிப்பா யிராது. —( ,, )

நல்லதை உள்ளே வைத்தால், நல்லதை வெளியே எடுக்கலாம். —யூதர்

உலகத்திலுள்ள எல்லாத் தலைகளையும்விட, ஒரு நல்ல இதயம் மேலானது. —இங்கிலாந்து

உறுதியா யில்லாவிட்டால், நீ நல்லவனு யிருக்க முடியாது. —( ,, )

தீமைக்கு உதவி செய்பவன் நன்மைக்குக் கேடு செய்கிருன். —கிரீஸ்

நல்லவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒரு தெய்வம் தங்கி யிருக்கின்றது. —லத்தீன்

அதிருஷ்டமுள்ளவன் என்பதைக் காட்டிலும், நல்லவன் என்று பெயரெடு. —லத்தீன்

நன்மை செய்வதில் நாம் சலிப்படையாமல் இருப்போமாக. —பு. ஏற்பாடு

நீ நல்லவனுயிருந்தால், தனிமையாயிருப்பாய். —மார்க் ட்வெயின்

தீமை வெளியே போயிருந்தால்தான், நன்மை வீட்டுக்குள் வர முடியும். —ஸெக்

# உலக அநுபவம்

வீடுதோறும் மண் அடுப்பு உண்டு. -இந்தியா

மனிதன் நனைந்தாலொழியக் குடிசை கட்ட மாட்டான்; தலையில் தட்டி வீங்கினாலொழியக் குனிய மாட்டான். -( ,, )

மரத்திலே பானை செய்தால், ஒரு முறைதான் சமைக்கலாம் -( ,, )

உலகம் யானைக்கே உதவி செய்யும், எறும்பை மிதித்து நசுக்கிவிடும். -( ,, )

ஒவ்வொரு நிமிடமும் உலகை உற்றுப் பார்த்தால், எவர்களைப் பாராட்டுவது, எவர்களிடம் துக்கம் விசாரிப்பது? -( ,, )

நீ ரொட்டியுடன் சர்க்கரை சேர்த்து உண்ண வேண்டுமானால் உலகைப் புகழ்ந்து பேசு. -( ,, )

பாதிக் கோழியை கறிவைத்து, பாதியை முட்டையிட வைத்துக் கொள்ள முடியாது. -( ,, )

நண்பனை வறுமையில் அறியலாம், வீரனைப் போரில் அறியலாம், யோக்கியனைக் கடனில் அறியலாம், மனைவியைச் செல்வமிழந்த நிலையில் அறியலாம், பந்துக்களை இடுக்கண் வருங்கால் அறியலாம். -( ,, )

நாவிதரில் பழையவன், வண்ணாரில் புதியவன். -( ,, )

பத்து மனிதர்—பத்து நிறம். -ஜப்பான்

மூடு பனியை விசிறியால் விரட்ட முடியாது. -( ,, )

கற்கள் மிதக்கும் பொழுது, இலைகள் அமிழ்ந்துவிடும். -( ” )

திறமையுள்ள நீச்சல்காரர்கள் நீரிலே மடிவார்கள், திறமையுள்ள சவாரி செய்பவர்கள் வேட்டையிலே மடிவார்கள். -ஜப்பான்

பத்து நாளில் சூடாக்கியது ஒரே நாளில் குளிர்ந்து விடும். -( ” )

பண்டைக்காலம் முதல் மாருமல் இருப்பவை: நீரின் ஓட்டமும் காதலின் போக்கும். –ஜப்பான்

ஆயிரம் உபதேசங்களைவிட ஓர் அநுபவம் பாடம் கற்பிக்கும். –துருக்கி

(கோவேறு) கழுதை மேலுள்ள பாரத்தில் சேணத்தைச் சேர்த்துக் கணக்கிடுவதில்லை. –( ,, )

உலகிலே ஆதாயம், புகழ் என்ற இரண்டு பேர்கள் மட்டுமே ஓடிச் சாடித் திரிகிருர்கள். –சீனு

வீட்டுக்குள்ளே வண்டி செய்யலாம். ஆனுல் அதைப் பாதையிலேதான் ஓட்டவேண்டும். –( ,, )

உலகம் முழுவதும் காகம் கருமைதான். –( ,, )

நாயின் வாயில் தந்தம் இராது. –( ,, )

சேற்றில் ஓர் அடி வைப்பதை விட, பத்தடி சுற்றிச் செல்வது மேல். –( ,, )

வல்லவர்களை அடக்க வல்லவர்கள் உண்டு; திறமைசாலிகளைத் தொடர்ந்து திறமைசாலிகள் வருவார்கள். –( ,, )

வீட்டுக்கு வெளியிலே மனிதருக்கு மதிப்பு குறையும், சரக்குகளுக்கு மதிப்புக் கூடும். –( ,, )

நீர் கப்பலைத் தாங்கும், அதுவே கப்பலைக் கவிழ்க்கவும் செய்யும். –( ,, )

வண்டி வந்தால், வழி உண்டாகும். –( ,, )

வழியை அடைத்து வேலி போட்டால், ஜனங்கள் அதில் ஏறிக் குதிப்பார்கள், வழியை திறந்து வைத்தால், வேலியை உடைப்பதற்கு வேறிடம் பார்ப்பார்கள். –சீனு

ஒட்டகத்தின் மேலிருப்பவன் திட்டங்கள் போடுகிருன், ஒட்டகத்திற்கும் திட்டங்கள் உண்டு. –அரேபியா

ஈச்ச மரத்திற்கு வேர் தண்ணீரிலும், உச்சி வெய்யிலிலும் இருக்க வேண்டும். –( ,, )

செத்தது நாய்தான், ஆனல் சவ ஊர்வலம் மிக நீளம்
—அரேபியா

யூதனுடன் சாப்பிடு, ஆனல் கிறிஸ்தவன் வீட்டில் படுத்துறங்கு. —( ,, )

நீதிபதியின் குதிரை (கோவேறு கழுதை) இறந்தால், எல்லோரும் சென்று துக்கம் விசாரிப்பர்; நீதிபதியே இறந்து போனல், ஒருவரும் போகமாட்டார்.— ( ,, )

நீ மிகவும் மென்மையாயிருந்தால், உன்னைக் கசக்கிப் பிழிந்து விடுவார்கள்; நீ விறைப்பாயிருந்தால், உன்னைத் தகர்த்து விடுவார்கள். —( ,, )

கிணற்றைப் பனி நீரால் நிரப்ப முடியாது. —( ,, )

ஒட்டகை மேல் உள்ளவனுக்கு முதுகு கூனலில்லை.
—ஆர்மீனியா

ஒரு மேட்டை வெட்டினல்தான் ஒரு பள்ளம் நிரம்பும்.
—( ,, )

எங்கோ உள்ள ஃபீனிக்ஸ் பறவையைவிட உள் நாட்டுக் காகம் மேலானது. —கீழ்நாடுகள்

[ஃபீனிக்ஸ் பறவை இறந்த பின்னும் உயிர் பெறுமாம்; இது கவிஞர்களின் கற்பனை.]

வாள், பெண், பெட்டைக் குதிரை, தண்ணீர்—இவைகளில் நம்பிக்கை வைக்க வேண்டாம். —ஆப்கானிஸ்தான்

நல்ல கனியிலிருந்து கசக்காமலே சாறு வரும். -பாரசீகம்

மாவுத்தன் யானைகளாலேயே சாவான், முதலைகள் வளர்ப்பவன் அவைகளாலேயே சாவான், பாம்பாட்டி பாம்புகள் கடித்தே சாவான். —சயாம்

போகும்போது பாதை கரடுமுரடு, திரும்பும்போது மென்மையாகிவிடும். —தாய்லந்து

தெரிந்த மனிதனின் குணத்தை நாம் போற்றுவோம், தெரியாத மனிதனின் அங்கியைப் போற்றுவோம்.
—( ,, )

தேசத்தைப் போல மொழி, அரசனைப் போலப் பிரஜைகள், தாயைப் போல மகள், விதையைப் போல முளை.
-பார்சி

சேற்றிலிருப்பவன் கரையிலிருப்பவனையும் சேர்த்து இழுத்துக் கொள்வான். -ஃபிரான்ஸ்

இரண்டு சனிக்கிழமைகளுக்கு இடையிலே எத்தனையோ அற்புதங்கள் நிகழ்கின்றன. -( ,, )

ஒரு பையிலுள்ள அரிவாள், பூட்சுக்குள் இருக்கும் துரும்பு, சாளரத்தின் அடியிலுள்ள பெண்—இவைகள் தாம் இருப்பதை அறிவுறுத்திக் கொண்டே யிருக்கும்.
—ஜெர்மனி

இந்தக் காலத்தில் சுவர்க்கத்திற்குப் போனால்தான் நாம் தேவர்களைச் சந்திக்க முடியும். -போலந்து

பூட்ஸ் தேய்வதைவிடப் பாதங்கள் தேய்வது நலமென்றே செல்வர்களும் ஏழைகளும் சேர்ந்து சொல்லுகிறார்கள்.
-( ,, )

பெரிய மரம் சாய்ந்தவுடன், ஒவ்வொருவரும் வந்து அதை வெட்டிக் கொண்டு போவர். -( ,, )

நீ இனிமையா யிருந்தால், உன்னை விழுங்கி விடுவார்கள்; கசப்பா யிருந்தால் உன்னை வெளியே துப்பிவிடுவார்கள். -( ,, )

தாடியுள்ள பெண்களையும், தாடி வளராத ஆண்களையும் நம்ப வேண்டாம். -பாஸ்க்

கேள்வி, கவனம், மௌனம், பொறுமை—இவை நீ கேளாமலே எல்லாவற்றையும் உனக்குக் கற்பிக்கும்.
—பெல்ஜியம்

தானாக ஓடுகிற வண்டியைத் தள்ளிவிட ஆள் சேரும்.
-ஸ்காட்லந்து

ஓர் அறையிலே மரணம்; அடுத்த அறையிலே வாரிசுரிமை.
-( ,, )

பாட்டன் வாங்குகிறான், தந்தை கட்டுகிறான், மகன் விற்கிறான், பேரன் பிச்சையெடுக்கிறான். -( ,,

நெட்டையா யிருந்தால் இராட்சசன் என்பார்கள்; குட்டையாயிருந்தால் குள்ளன் என்பார்கள். —வேல்ஸ்

தந்தையும் தாயும் நமக்குப் பேசக் கற்பித்துள்ளனர்; உலகம் வாயை மூடிக் கொண்டிருக்கக் கற்பித்துள்ளது. -ஸெக்

இருபதில் அழகன், முப்பதில் பலசாலி, நாற்பதில் செல்வந்தன், ஐம்பதில் அறிவாளி என்றில்லாதவன், பின்னால் அவ்வாறு ஆக முடியாது. -( ,, )

எல்லாவற்றையும் தராசில் நிறுக்க முடியாது. —டென்மார்க்

இறக்கிறவர்கள் உள்ள இடத்திலேயே வாரிசுகளும் இருக்கிறார்கள். —எஸ்டோனியா

உனக்கு மேலானவரிடமிருந்து ஒதுங்கியிரு. —கிரீஸ்

வைத்தியர்கள், மூடர்கள், உபதேசம் செய்பவர்கள்— இந்தத் தொழில் பார்ப்பவர்களே அதிகம். -ஹங்கேரி

முன்னேறுதவன் பின்னேறுகிறான். —லத்தீன்

வயிறு நிறைந்தவனும் பட்டினி கிடப்பவனும் ஒரே பாட்டைத் தான் பாடுகிறார்கள். —நார்வே

வானம் என்னைப் படைத்தது, பூமி என்னைத் தாங்குகின்றது. —ரஷ்யா

தெரிந்ததை யெல்லாம் சொல்லாதே, கேட்டதை யெல்லாம் நம்பாதே, முடிந்ததை யெல்லாம் செய்யாதே. -போர்ச்சுகல்

பாதி உலகம் துள்ளுகின்றது, பாதி அழுகின்றது. -ரஷ்யா

வீடுதோறும் புகைக்கூண்டு கறுப்பாய்த்தான் இருக்கும். -செர்பியா

ஒவ்வொரு கிராமமும் தன் பாட்டையே பாடுகின்றது. -( ,, )

உலகத்தின் இயல்பு இப்படி யிருக்கிறது; பணம் ஒருவன் கையில், பை மற்றொருவன் கையில். —சைலீஷியா

வக்கீலிடம் பற்று அதிகமானல் செல்வம் குறைந்துவிடும்; வைத்தியரிடம் பற்று அதிகமானல் ஆரோக்கியம் குறைந்துவிடும்; பாதிரியாரிடம் பற்று அதிகமானல் கௌரவம் குறைந்துவிடும். —ஸ்பெயின்

வெய்யிலும், துக்கங்களும், விருந்துகளும் சவக்குழிகளை நிரப்புகின்றன. —( ,, )

பலர் முகர்ந்த ரோஜாவில் மணம் இராது. —( ,, )

அநுபவத்தை ஆண்டுகளைக் கொண்டு கணக்கிட முடியாது, ஏனெனில் ஒரு மணி நேரத்தில் பல ஆண்டுகளைக் கடத்தி விடலாம். —ஸ்விட்சர்லந்து

ஒருவன் யாத்திரை போய்ப் போய்க் கடைசியில் தன் வீட்டுக்கே வருகிறன்; ஒருவன் வாழ்ந்து வாழ்ந்து கடைசியில் பூமிக்கே திரும்புகிறன். —ஆப்பிரிக்கா

எதிலும் அநுபவமில்லாதவர்களுக்கு அழுகுரலும் பாட்டாகத் தோன்றும். —( ,, )

இந்த உலகத்தில் மூன்று நண்பர்கள் இருக்கிறர்கள்; தைரியம், புத்தி, நுண்ணறிவு. —ஆப்பிரிகா

உன்னை நேசிப்பவன் களைப்படையச் செய்கிறன், துவேஷிப்பவன் கொன்றுவிடுகிறன். —( ,, )

நாவிதரில் பழையவன், வண்ணாரில் புதியவன். —இந்தியா

நீரிலே ஆழ்பவர்களைக் காட்டிலும் நிலத்திலே ஆழ்பவர்கள் அதிகம். —ரஷ்யா

## உலகத்தோடு ஒழுகல்

மனிதர்களைச் சந்தித்தாலும், பேய்களைச் சந்தித்தாலும். அவர்கள் பேசுவது போலவே பேசவும். —சீன

நீ விரும்பியதெல்லாம் உண்ணலாம், ஆனல் உடை மட்டும் மற்றவர்களைப் போலவே அணிந்து கொள்ள வேண்டும். —அரேபியா

நண்பகலில் அரசன் அது நிசி என்றல், நீயும் நட்சத்திரங்களைப் பார். —( ,, )

ஒருவன் உன்னைக் கழுதை என்றால், கவனிக்க வேண்டாம்; இருவர் சொன்னால், உன் முதுகில் பொதியை ஏற்றிக் கொள்ள வேண்டியதுதான். —யூதர்

பலர் செய்வதைப் போல நீயும் செய், உன்னை மக்கள் பெருமையாய்ப் பேசுவர். —( ,, )

மற்றவர்கள் உரக்கக் கூவினால் நீயும் ஊளையிடு. —ரஷ்யா

குருடர்கள் நடுவில் நீயும் கண்களை மூடிக்கொள். —துருக்கி

எந்த நாட்டிற்குப் போனாலும், அங்கே செய்யத் தகாதவை எவை என்று முதலில் தெரிந்து கொள்ளவும். —சீனா

ஒரு நகரத்தில் எல்லோரும் ஒரு கன்றைக் கும்பிடுவதைக் கண்டால். நீயும் அதற்குப் புல்லறுத்து போடு. —எகிப்து

EFERENCE

———

1 1935
MADRAS